விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 44

வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 04 திங்கட்கிழமை (20.08.2012)

பக்கங்கள்: பதினாறு

புகைத்தலை தவிர்ப்போம்

## சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா பயணம்:

# முப்பது நாட்கள் கடலில் தத்தளித்த முப்பது பேரைக் கடற்படை மீட்டது



கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட இழுவைப் படகில் இருந்த பயணிகளை படத்தில் காணலாம்

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்வதற்காக கடந்த ஜுலை 17ஆம் திகதி புறப்பட்டுச் சென்ற வள்ளம் பழுதடைந்த நிலையில், ஆழ்கடலில் நீர் ஆகாரமின்றி முப்பது நாட்களாக தத்தளித்துக் கொண்டிருந்த 30 பேர் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இலங்கைக்கு தென் கிழக்கு பகுதியில் 300 கடல் மைல் தொலைவில் அஷேன் புதா-2 என்ற ஆழ் கடல் வள்ளம் பழுதான நிலையில் இருப்பதாக கடற்படைக்கு கிடைத்த தகவலையடுத்து மீட்புப் பணிகளை கடற்படையினர் ஆரம்பித்தனர்.

கடந்த ஜுலை மாதம் 18ஆம் திகதி நீர்கொழும்பிலிருந்து புறப்பட்ட மேற்படி வள்ளத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த 19 தமிழர்களும் 11 சிங்களவர்களும் பயணித்துள்ளனர்.

இவர்களை மீட்டு கரைக்கு அழைத்துவருவதற்காக ஆழ்கடல் மீன் பிடிப்பில் ஈடுபட்டிருந்த ஆழ்கடல் வள்ளம் முன்வந்ததுடன் கடற்படையின் வழிகாட்டலுடன் 30 பேரை மீட்டு வந்தது.

சுமார் 30 நாட்களாக ஆழ் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்கள் அருந்த நீர் இன்றி ஆகாரமின்றி மிகவும் துன்பப்பட்ட நிலையில் காணப்பட்டதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர். 02

---

தரமற்ற எரிபொருள்:

## ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டியும் கை விரிப்பு

“சிங்கப்பூர் விற்றோல் கம்பனியிடம் இருந்து தரம் குறைந்த டீசல் இறக்குமதி செய்யப்பட்டமை கண்டு பி[illegible]கப்பட்ட பின்னரும் மேலும் 20 ஆயிரம் தொன் டீசலை அ[illegible]த கம்பனியிடமிருந்து இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்துள்ளது” என்று அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார். 02

## சீஷெல்ஸ் ஜனாதிபதி இன்று இலங்கை வருகிறார்

சீஷெல்ஸ் நாட்டு ஜனாதிபதி ஜேம்ஸ் அலிக்ஸ் மிச்சேல், இன்று திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று வரும் இவர், ஓகஸ்ட் 23 ஆம் திகதி 02

## இலங்கைக்கு பிரிட்டன் விடுத்த பயண எச்சரிக்கை தவறானது

### வெளிவிவகார அமைச்சுக் காரியதரிசி

இலங்கையில் தேசியவாத எழுச்சி, பாலியல் வல்லுறவுக் குற்றங்கள் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணத்தால் இலங்கைக்குச் செல்லும் பிரிட்டிஷ் பிரஜைகளை எச்சரிக்கையாக இருக்குமாறு பிரிட்டன் விடுத்த அறிவிப்பு மிகத் தவறானது என்று வெளிவிவகார அமைச்சுக் காரியதரிசி கருணாதிலக அமுனுகம தெரிவித்தார்.

பிரிட்டன் தெரிவித்திருக்கும் ஆலோசனைகளில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு கோர விருப்பதாகவும், இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகரிடம் இப்பிரச்சினை பற்றிப் பேசப்போவதாகவும் கருணாதிலக அமுனுகம தெரிவித்தார்.

“இலங்கையின் களநிலமைகள் குறித்து தவறான ஆலோசனைகள் லண்டனுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே நாங்கள் இதுகுறித்து சில உண்மைகளை அறிந்துகொள்ள விரும்புகிறோம் இல்லையென்றால் பயண ஆலோசனை அறிக்கையை முழுமையாக வாபஸ் பெறுமாறு பிரிட்டனைக் கோரவிருக்கிறோம்” என்றும் அவர் சொன்னார். “இலங்கையில் எந்தவொரு வெளிநாட்டவர் மீதும் அண்மைக் காலத்தில் தாக்குதல் எதுவும் நடத்தப் படவில்லை. எனவே பிரிட்டிஷ் பயணிகளுக்கு லண்டன் வழங்கிய 02

## மட்டு.நகரில் ஈரோஸ் அலுவலகம் மீது பெற்றோல் குண்டு வீச்சு

மட்டக்களப்பு, பூம்புகார் பகுதியில் உள்ள ஈரோஸ் கட்சி அலுவலகத்தின் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாதோரினால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஈரோஸ் தலைவரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தலைமை வேட்பாளரும் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினருமான இரா.பிரபாகரனின் வாகனம் சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

நேற்று அதிகாலை 1.45 02

## வெள்ளவத்தை வீட்டில் மூன்று சடலங்கள் : மகனைத் தேடிப் பொலிஸார் வலைவீச்சு

கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண டெரஸ் ஒழுங்கையிலுள்ள வீடொன்றிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முழுக்கிவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று நடக்கவிருந்த பிரேத பரிசோதனைகள் இன்றைய திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதனால் இது கொலையா? அல்லது தற்கொலையா? என்பது குறித்து எதையும் திட்டவட்டமாக கூற முடியாதிருப்பதாக பொலிஸ் பேச்சாளரும் வெள்ளவத்தை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரும் கூறுகின்றனர்.

சம்பவத்தில் ஹட்டன் கொட்டகலைப் பகுதியைச் சேர்ந்த தாயும் தந்தையும் மகளுமே உயிரிழந்துள்ளனர். இவர்கள் சங்கிலி குமாரசாமி (56), அவரது மனைவி பூபவதி (54), மற்றும் அவர்களின் மகளான அனித பிரியா (25) என பொலிஸார் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

இவர்கள் பற்றி தெரியவருவதாவது:- சங்கிலி குமாரசாமி கொட்டகலை தோட்டத்தில் ஓய்வு பெற்ற சாரதி 02

## ஜி.சி.ஈ. (உ/த) வினாத் தாள் தவறுகளை தவிர்க்க அடுத்த ஆண்டு முதல் புதிய திட்டம்

ஜி.சி.ஈ.(உ.த) பரீட்சை வினாத் தாள்களில் தவறுகள் இடம்பெறாமல் செய்வதற்காகப் புதிய திட்டமொன்றினை அடுத்த வருடம் முதல் அமுல்படுத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் திட்டமிட்டுள்ளார். கேள்விப் பத்திரங்கள் கொண்ட விடயதான வங்கியினை உருவாக்குவதற்குப் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு.எம்.ஜே. புஷ்பகுமார நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்திட்டத்தின்படி பல்வேறு கல்விமான்களின், உதவியுடன் ஒவ்வொரு பாடத்துக்கும் தலா ஆயிரம் நகல் கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு விடயதான வங்கியில் வைக்கப்பட்டிருக்கும். இப்போது நிபுணர்கள் குழுவொன்றினாலேயே கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதுபோலன்றி மிகச் சிறந்த கேள்விப் பத்திரங்களிலிருந்து எடுக்கப்படும் கேள்விகள் இறுதியில் தயாராகும் கேள்விப் பத்திரங்களில் சேர்க்கப்படும்.

இதுவொன்றும் புதிய திட்டமல்ல என்று ஆசிரிய தொழிற் சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. தற்போது ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை வினாத் தாள் தொடர்பாக ஏற்பட்டுள்ள 02

## சூடான் விமான விபத்து: அமைச்சர் உட்பட 32 பேர் பலி

சூடானில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் அந்நாட்டு சமய விவகார அமைச்சர் உட்பட 32 பேர் உயிரிழந்துள்ளதாக சூடான் அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

ரம்ழான் பெருநாள் கொண்டாட்டமொன்றுக்காக அரசாங்க தூதுக் குழுவொன்றை ஏற்றிச்சென்ற விமானம் தோலாடி மலைப்பகுதியில் வீழ்ந்துள்ளதாக சூடானின் அரச செய்திச்சேவை தெரிவித்துள்ளது. மோசமான காலநிலையே இவ் விபத்துக்கு காரணம் எனவும் அச்செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

## விஷமிகள் அட்டகாசம்

வலிகாமம்

நல்லூர் உற்சவத்தில் சுவாமி தீர்த்தமாடும் கேணியை சுத்தமாகவும், அடியவாகளுக்கு இடையூறு இல்லாத வகையிலும் பாதுகாப்பாக வைத்திருக்க எடுத்த மயற்சி இறுதி குறிப்பிட்ட இளைஞாகளின் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டது. சுவாமி தீர்த்தம் ஆடும் கேணியில் கடந்த காலங்களில் இளைஞாகள் சிலர் விசமத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக தீர்த்தம் ஆலய கிணற்றில் நடைபெற்றுவந்தது. இம்முறை கேணியில் சுவாமி தீர்தமாடும் கேணி பராமரிக்கப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் அடைக்கப்பட்ட வேலிகளுக்கு மேலால் சிலர் பாய்ந்து கேணியில் குளித்து அடியவர்களை வேதனைப்படுத்தியது.

# பூந்தமல்லி ஈழத்தமிழர் அகதி முகாமில் உண்ணாவிரதம் தொடர்கிறது

ஈழத் தமிழ் அகதியான செந்தூரன் என்பவர் காலவரையறையற்ற பட்டினிப்போராட்டத்தை மேற்கொண்டுள்ள நிலையில், அவருடன் மேலும் எட்டு இலங்கை அகதிகள் உண்ணாவிரதத்தில் இணைந்துள்ளனர்.

சிறப்பு முகாங்கள் மூடப்பட வேண்டும் என்பதை முன்வைத்து செந்தூரன் பட்டினிப்போராட்டத்தை நடாத்த முற்பட்டவேளையில், ஓகஸ்ட் 04 அன்று செங்கல்பட்டு முகாமிலிருந்த செந்தூரன் பூந்தமல்லி முகாமுக்கு மாற்றப்பட்டார். முகாங்களில் உள்ள அகதிகளை ஒன்றிணைத்து பட்டினிப்போராட்டம் ஒன்றை மேற்கொள்வதில் செந்தூரன் ஈடுபடுவதாக சந்தேகிக்கப்பட்ட நிலையிலேயே இவர் பூந்தமல்லி சிறப்பு அகதிகள் முகாமுக்கு மாற்றப்பட்டார்.

“இவ்வாறான சிறப்பு முகாங்களில் உள்ளவர்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்திப்பதுடன், இவர்கள் எந்தவொரு நியாயமான காரணங்களுமின்றி இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்” என அகதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

செந்தூரன் தனது பட்டினிப் போராட்டத்தை ஓகஸ்ட் 06 அன்று ஆரம்பித்தார். தொடர்புபட்ட அதிகாரிகள் செந்தூரனுடன் பேச்சுக்களை நடாத்தி அவரது கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி தாமும் இப்போராட்டத்தில் இணைந்து கொள்வதென மேலும் எட்டு அகதிகள் தீர்மானித்துள்ளனர்.

“இதனுடன் தொடர்புபட்ட அதிகாரிகள் செந்தூரனுடன் பேச்சுக்களை நடாத்தும் வரை நாம் எமது பட்டினிப் போராட்டத்தை தொடர்வதென தீர்மானித்துள்ளோம்” என காலவரையறையற்ற பட்டினிப் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ள ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் நெருப்புக் காய்ச்சல் பரவுகிறது

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் எட்டுப்பேர் நெருப்புக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நீரினால் பரவும் இந்த நோய் கடந்த இரு வாரங்களாக அதிகரித்துக் காணப்படுவதனால் சாப்பாட்டுக் கடைகளிலும் உணவு விடுதிகளிலும் நீரை அருந்த வேண்டாமென்று கொழும்பு மாநகரசபையின் பிரதம மருத்துவ அதிகாரி டாக்டர்.

பிரதீப் காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார். தனியார் வைத்திய சாலைகளி லும் நெருப்புக் காய்ச்சலால் பீடிக் கப்பட்ட நோயாளிகள் உள்ளதா கவும் தேசிய ஆஸ்பத்திரி பணிப் பாளர் டாக்டர் அணில் ஜெய சிங்க குறிப்பிட்டார். நாட்டில் நிலவும் வறட்சி நிலையே நோய் அதிகரிப்புக்கு காரணம் என்றும் அவர் கூறினார்.

# சந்நிதி ஆற்றில் குளித்தவர் மயிரிழையில் உயிர் தப்பினார்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் ஆற்றில் குளிக்கச் சென்ற இளைஞரொருவர் எல்லை தாண்டிச் சென்றதால் நீரில் மூழ்கி மயக்கமுற்ற நிலையில் ஏனையவர்களால் பாதுகாக்கப்பட்டார். மானிப்பாய், சுதுமலை, ஐங்கரன் வீதியைச் சேர்ந்த மோகனசுந்தரம் கௌசிகன் என்ற 22வயது இளைஞனே மயிரிழையில் உயிர் தப்பியவராவர். ஆபத்தான பகுதி என்று ஆற்றில் போடப்பட்டிருந்த எச்சரிக்கைப் பலகையும், கம்பி வேலியும் பழுதடைந்ததால் குளிக்க வருபவர்கள் எல்லை தாண்டிச் செல்ல வேண்டிய ஆபத்தும் ஏற்படுகிறது. இதுபற்றி உரியவர்கள் கவனம் எடுக்க வேண்டும்.

# திருக்கேதீஸ்வர புனருத்தாரண வேலைகள் 36 கோடி ரூபா செலவில் இன்று ஆரம்பம்

சுமார் 36 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட இந்திய நிதியுதவியுடன் திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண வேலைகள் இன்று மாலை மூன்று மணியளவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

மாமல்லபுரம் கட்டடக்கலை மறறும் சிறபக் கலைக் கல்லூரியிலிருந்து வரும் விற்பனர்கள் முதற் கட்ட புனருத்தாரண வேலைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். இந்திய மத்திய அமைச்சர் குமாரி செல்ஜா இந்தப் புனரமைப்பு பணிகளின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டு வேலைகளை ஆரம்பித்து வைப்பார். குமாரி செல்ஜா இந்திய கலாசார, வீடமைப்பு மற்றும் வறுமை ஒழிப்புக்கான மத்திய அமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதற்கட்டப் பணியில் ஆலயத்தின் உள் மகா மண்டபம் கருங்கற்களால் செதுக்கப்படுமென திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை தெரிவித்துள்ளது. அங்குரார்ப்பண நிகழ்வில் இந்திய அமைச்சர் குமாரி செல்ஜா அவர்களுடன் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்திய உயர்ஸ்தானிகர் அசோக்கே காந்தாவுக்கும் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் வி.கைலாசபிள்ளைக்குமிடையே ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

## தேர்த்திருவிழாவில் களவுகள் இல்லை

வலிகாமம்

நல்லூர் ஆலய தேர் திருவிழாவில் இம்முறை களவகள் எவையும் இடம் பெறவில்லையென நல்லூர் ஆலயத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இம்முறை நல்லூர் ஆலய உற்சவத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட ஆண்பெண் பொலிஸார் சிவில் உடையிலும் சீருடையிலும் ஆலய உள்வீதி உட்பட வெளிவீதியிலும் கடமையில் ஈடுபட்டிருந்தார்கள்.

# உடுவிலில் சங்கிலி அபகரிப்பு

வலிகாமம்

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் தனிமையில் சைக்கிளில் வந்த பெண்ணின் சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை அபகரித்துச் சென்றனர்.

கழுத்தை நெரித்து அபகரித்தனர் இச்சம்பவம் வியாழக்கிழமை பிற்பகல உடுவில் லவ் லேனில் இடம்பெற்றுள்ளது.

## மட்டு.நகரில் ஈரோஸ்...(தொடர்)

மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றதாகவும் பிரபாகரன் அலுவலகத்தில் இருந்தபோதிலும், அவருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

## சீஷெல்ஸ் ஜனாதிபதி இன்று...(தொடர்)

வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பஸில் ராஜ பக்ஷ மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட தலைவர்களுடன் சீஷெல்ஸ் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

பூகோள திரைச்சீலையில் சிறிய நாடுகளின் பாத்திரம் எனும் தலைப்பில், சர்வதேச விவகாரங்களுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் அவர் உரையாற்றுவார்.

## ஆராய நியமிக்கப்பட்ட...(தொடர்)

கடந்த மூன்று வாரங்களில் தரம் குறைந்த எரிபொருளை பயன்படுத்தியதால் 250க்கும் அதிகமான அரசாங்க பஸ்கள் 1000க்கும் அதிகமான தனியார் பஸ்கள், ஐம்பது ரயில் என்ஜின்கள் ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

தரம்குறைந்த டீசல் இறக்குமதி தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட கமிட்டி கடந்த வாரம் தனது அறிக்கையை கையளித்தது.

வாகனங்கள் பழுதடைந் ததற்கான காரணத்தை இந்தக் கமிட்டியினால் கண்டறிய முடியா மல் போய்விட்டது.

வெளிநாடு களில் இருந்து இரு ஆய்வுகூட அறிக்கைகள் வரும் வரை உண்மையான காரணங்களைக் கண்டறிய முடியாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளவத்தை வீட்டில் மூன்று...(தொடர்)

அவரது மனைவி தோட்டத் தொழிலாளி. மகள் எழுதுவினைஞராக பணிபுரிந்துள்ளார்.

தந்தை அண்மையிலேயே ஓய்வு பெற்றார். இவர் 40 வருடங்களுக்கு மேல் சாரதியாக பணிபுரிந்துள்ளார். இந்நிலையில் கொழும்பிலுள்ள மருந்துகள் விற்பனை செய்யும் நிலையமொன்றின் பிரதிநிதியாக வேலை பார்த்து வரும் அவரது மகன் பிரசாந்த் கடந்த 11ஆம் திகதி கொட்டகலையிலுள்ள அவரது வீட்டிற்கு வந்துள்ளார்.

அடுத்த நாள் 12ஆம் திகதி முன்னேஸ்வரம் செல்வதாக அயலவர்களுக்கு கூறிவிட்டு தனது தந்தை, தாய், சகோதரியை கொழும்பிற்கு அழைத்து வந்துள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் வீடொன்றை வாடகைக்கு அமர்த்தி கடந்த 12 ஆம் திகதியன்று தனது குடும்பத்தாரை அங்கு தங்க வைத்துள்ளார். இவர்கள் குடும்பமாக உரையாடும் சத்தத்தினை இறுதியாக செவ்வாய்க் கிழமை (14) இரவு கேட்க முடிந்ததாக பக்கத்து வீட்டார் கூறினர்.

மறுநாள் புதன்கிழமை (15) அதிகாலை மகனான பிரசாந்த் தொலைபேசியில் எவரிடமோ உரையாடிக் கொண்டிருந்ததையும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இந்நிலையில் 16ஆம் திகதியன்று பிரசாந்த் கொட்டகலையிலுள்ள தனது வீட்டுக்கு தனியாக வந்ததாகவும் சுமார் ஒரு மணித்தியாலம் வரை வீட்டிற்குள் கதவையடைத்துக் கொண்டு இருந்துவிட்டு பின்னர் அங்கிருந்து திரும்பிச் சென்றுவிட்டதாகவும் அயலவர்கள் கூறினர்.

வெள்ளவத்தையில் மூடிக் கிடந்த வீட்டுக்குள்ளிருந்து துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதையடுத்தே சடலங்கள் கடந்த 18ஆம் திகதி நண்பகல் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தலைமறைவாகியுள்ள மகனை பொலிஸார் தேடி வலைவிரித்துள்ளனர்.

புதிதாக குடியமர்த்தப்பட்ட வீட்டில் தந்தையின் ஓய்வின் போது கிடைக்கப்பெற்ற பணத்தைக் கொண்டு இவர்கள் பல நவீன மின் உபகரணங்களை வாங்கியுள்ளனர். தந்தைக்கு கிடைக்கப் பெற்ற ஓய்வூதியம், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை உரிமை கோரி ஏற்பட்ட தகராறில் இந்த உயிரிழப்புக்கள் இடம் பெற்றிருக்கலாமென ஊகிக்கப்படுகிறது.

இருப்பினும் மரண விசாரணைகள் முடிவடையும் வரை எதையும் திட்டவட்டமாக கூறமுடியாதென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ஜி.சி.ஈ.(உ/த) வினாத்தாள்...(தொடர்)

பிரச்சினையைத் திசை திருப்புவதற்காகவே இவ்வாறு பரீட்சை ஆணையாளர் செயற்படுகிறாரென்று ஆசிரியத் தொழிற்சங்கள் குற்றம் சாட்டுகின்றன.

1990 ஆம் ஆண்டு இந்த விடயதான வங்கித் திட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்தது. இரண்டாம் நிலைக்கல்வி அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக 1990 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்திருந்த சிபாரிசுகளில் இந்த விடயதான வங்கித் திட்டம் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2000, 2001 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைகளின் போது இத்திட்டம் பரீட்சித்தும் பார்க்கப்பட்டது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் காரியதரிசி ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

## இலங்கைக்கு பிரிட்டன் விடுத்த...(தொடர்)

ஆலோசனைக் குறிப்புகள் சரியாதவையல்ல” என்றும் அவர் சொன்னார்.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளிடம் தமிழ்நாதம் வினவியது. “இந்த அறிக்கை கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தால் விடுக்கப்படவில்லை. லண்டனிலுள்ள வெளியுறவு அலுவலகமே இதனை விடுத்தது” என்று கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## முப்பது நாட்கள் கடலில்...(தொடர்)

தங்கல்ல துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்ட இவர்களுக்கு நீர், ஆகாரங்களுடன், முதலுதவி கள், மருத்துவ உதவிகளும் உட னடியாக வழங்கப்பட்டன.மேலதிக விசாரணைகளுக்காக இரகசியப் பொலிஸாரிடம் 30 பேரும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சரியான தகவல் உரிய நேரத்தில் கிடைத்திருக்காவிடின் ஆழ் கடலிலேயே 30 பேரும் பரிதாபமாக உயிரிழக்கும் நிலை தோன்றியிருக்கும் எனவும் கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

சர்வதேச திருமண சேவை



உள்நாடு, வெளிநாடு, இந்து, கிறிஸ்தவர்கள் அனைத்து இனத்தவர்களில் டாக்டர், எஞ்ஜினியர், எக்கவுண்டன், SLAS, அனைத்து துறைசார்ந்த பட்டதாரிகள்,அரசு, தனியார்துறை, விவாகரத்தானவர்கள் முதற் கொண்டு அனைத்து மணமக்களின் விவரங்களுக்கு உடன் அனுகவும். விளம்பரத்துடன் நேரில் வருபவர்களுக்கு பதிவுக்கட்டணம் இலவசம். S.K. சிவகரன்
(அமைப்பாளர்)
சிவால்யா சர்வதேச திருமண நிலையம்
42/11, இராமலிங்கம் வீதி (பூங்கனி சோலை அருகில்),
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 0779694009.: 0771450599.
வவுனியா– 0244907956
Email Shivaalaya @ yahoo.com

# ஆஸிக்குக் கடத்தப்படவிருந்த 30 இலங்கையர் தமிழகத்தில் மீட்பு

படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லப்படவிருந்த 30 இலங்கையர்களை தமிழ்நாட்டின் கியூ பிரிவு பொலிஸார் வியாழனன்று மீட்டுள்ளனர். வண்டலூர் நகரில் குழுவொன்றிடமிருந்து இவர்கள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரகசிய தகவல் ஒன்றையடுத்து, இலங்கைத் தமிழர்களை ஏற்றிச்சென்ற வாகனமென்றை பொலிஸார் மறித்து சோதனையிட்டனர். எனினும் இம்மனிதக் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குழுவினர் தப்பியோடிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கிறிஸ்மஸ் தீவுக்குச் செல்லும் படகொன்றில் இவர்கள் ஏற்றப்படவிருந்தாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்கள் 50,000 முதல் ஒரு லட்சம் வரையிலான இந்திய ரூபா பணத்தை மேற்படி குழுவினருக்கு வழங்கியுள்ளனர். தற்போது மேற்படி இலங்கையர்களை தமிழகத்தின் பல்வேறு பாகங்களிலுள்ள அவர்களின் முகாம்களுக்கு திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஒருவார காலத்தில் தமிழகத்தில் இடம்பெற்ற இரண்டாவது சம்பவம் இதுவாகும். சில தினங்களுக்கு முன்னர் மனிதக் கடத்தல் தொடர்பாக 5 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்ததுடன் 23 இலங்கையர்களை மீட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் தமிழர் மறுவாழ்வுக்கு இந்தியா வழங்கிய நிதியுதவியின் செலவு விபரங்கள்

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மறுவாழ்வுக்காக இந்தியா ஒதுக்கிய நிதி பற்றி வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக மாநிலங்களவையில் எஸ்.எம். கிருஷ்ணா அளித்துள்ள எழுத்துபூர்வமான பதில்:

இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு, மீள் குடியேற்றத்துக்காக 2009-ம் ஆண்டு இந்தியா சார்பில் ரூ. 500 கோடி நிதி உதவி வழங்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்தார். அதன்படி அந்நாட்டுக்கு 2009-10-ம் நிதியாண்டில் ரூ. 68.96 கோடி, 2010-11-ம் நிதியாண்டில் ரூ. 93.86 கோடி, 2011-12-ம் நிதியாண்டில் ரூ. 181.94 கோடி வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிதியில் ரேஷன் பொருள்கள், ஆடைகள், சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. வட மாகாணத்தில் தற்காலிக மருத்துவ மனைகள் நிறுவப்பட்டன. மருந்துகள் வழங்கப்பட்டன. நிலத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளைக் கண்டறிந்து செயலிழக்கச் செய்ய இந்தியாவிலிருந்து 7 குழுக்கள் அனுப்பப்பட்டன.

உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தோருக்காக 10,400 மெட்ரிக் தொன்னுக்கும் மேற்பட்ட தங்குமிடப் பொருள்கள், வேளாண் உற்பத்தியைத் தொடங்குவதற்குத் தேவைப்படும் 95 ஆயிரம் பொருள்கள், 500 டிராக்டர்களும் வழங்கப்பட்டன.

இவை தவிர வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களில் பயணிகள் பேருந்து சேவைக்காக 55 பேருந்துகளை இந்தியா இலவசமாக வழங்கியுள்ளது.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணம், வவுனியாவில் செயற்கைக் கை, கால் உறுப்புகளை பொருத்துவதற்காக இந்திய நிபுணர்கள் ஒரு மாத முகாம் நடத்தினர்.

போரின்போது பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளைச் சரி செய்ய 4 லட்சம் சீமெந்து மூட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டன. மேலும், ரயில்வே, துறைமுகக் கட்டமைப்பு, சாலைப் போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் மறுவாழ்வு, மீள்குடியேற்றப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்காக ரூ. 290 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தவிர, இலங்கையில் வடக்கு ரயில்வே பாதை அமைக்கும் பணிகளுக்காக 80 கோடி அமெரிக்க டாலர்களை இலங்கைக்கு இந்தியா கடனாக வழங்கியுள்ளது.

இந்த நிதி அனைத்தும் சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க இரு நாட்டு அரசுகளின் சார்பில் உயர் நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு விநியோகிக்கப்படும் பொருள்களின் நிலவரம் குறித்து அந்நாட்டு அரசு இந்திய வெளியுறவு அமைச்சகத்துக்கு அறிக்கை அளித்து வருகிறது.


இலங்கையில் மேற்கொள்ளப்படும் மறுவாழ்வுப் பணிகளை மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் தலைமையிலான எம்.பி.க்கள் குழுவினர் கடந்த ஏப்ரல் 16-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர் என்றார் எஸ்.எம். கிருஷ்ணா.

# தேசிய மட்ட விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி முகாம்

உடுவில்

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மாணவர்களுக்கான பயிற்சி முகாம் இன்று 20ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துதல் மற்றும் பயிற்சி நுட்பங்களும் இங்கு கற்றுத்தரப்படும். அறுபதுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இப்பயிற்சி முகாமில் பங்குபற்றவுள்ளனர்.




கிளிநொச்சி மாவட்ட தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் கல்வி மற்றும் சமுதாய அபிவிருத்தி மனிதநேயப் பிரிவால் நடந்த வன்னி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி நகரில் இடம்பெற்றது. இதன்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் கிளிநொச்சி எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவதையும், அருகில் நிகழ்விற்கு தலைமை தாங்கிய மன்ற அமைப்பாளர் டாக்டர் கே.திருலோகமூர்த்தி மற்றும் இணைப்பாளர் ஜீவன் ஆகியோர் காணப்படுவதையும், ஊனமுற்ற ஒருவருக்கு அவரது மகனது கல்வி செயற்பாட்டை நோக்கமாகக் வைத்து வீ.ஆனந்தசங்கி சைக்கிள் ஒன்றை வழங்குதையும் மற்றும் ஊனமுற்ற ஒருவருக்கு சைக்கிள் திருத்தும் உபகரணங்களை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : கிளிநொச்சி நிருபர்)

# பொலிஸ்காரர் சங்கிலி அறுத்தாரென்ற செய்தி, இட்டுக் கட்டிய பொய்

- யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர்

நல்லூர் உற்சவத்தின் போது வாகனச் சாரதியொருவரின் தங்கச் சங்கிலியைப் பறித்துக் கொண்டு பொலிஸ்காரர் ஒருவர் ஓடினாரென்று வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானதென்று யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 16 ஆம் திகதி தேர்த் திருவிழாவின் போது கந்தர்மடச் சந்தியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ்காரர் ஒருவருக்கும் வாகனச் சாரதி ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையையடுத்து பொலிஷ்காரர் சாரதியின் சங்கிலியைப் பறித்துக் கொண்டு ஓடினாரென்று சில ஊடகங்கள் வெளியிட்ட செய்தி அப்பட்டமான பொய்யென்றும் அவர் சொன்னார்.

பொலிஸ் - பொதுமக் கள் நல்லுறவைக் கெடுக்கும் பொருட்டு வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு இதுவென்றும் அவர் சொன்னார்.

## வலிகாமத்தில் மும்மொழிப் பயிற்சி முகாம்

உடுவில்

வலிகாமம் கல்வி வலயப் பிரிவில் மும்மொழி வேலைத்திட்டம் தொடர்பான பயிற்சி மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்தில் நடைபெற்று வருகின்றன.

இம் மும்மொழி வேலைத்திட்டத்தில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளை வலிகாமம் கல்வி வலயப் பிரிவினைச் சேர்ந்த எழுபது மாணவர்கள் கற்று வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 29 பேர் கைது

கடந்த ஒரு வார காலத்திற்குள் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் 36 வழக்குகள் பதிவு செய்யப பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சட்டவிரோதமான மது விற்பனை தொடர்பாக 5 வழக்குகளும், கஞ்சா விற்பனை தொடர்பில் ஒரு வழக்கும், மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்திற்காக 7 வழக்குகளும், பொது இடத்தில் மதுபாவனை தொடர்பாக 7 வழக்குகளும், சூழல் மாசடைவை எற்படுத்தியமை தொடர்பாக 11 வழக்குகளும் ஏனைய குற்றங்களுக்காக 5 வழக்குகளும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணம், ஊரெழு பொக்கணை பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி வட்டக்கச்சியைச் சேர்ந்த முருகேசு சிவராசா (வயது 45) என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தலைமறைவாகியிருந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் துவிச்சக்கர வண்டிகள் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக அதிகளவில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

## இன்றைய இராசி பலன் (20.08.2012)

**நந்தன வருடம் ஆவணித் திங்கள் 4 ஆம் நாள் திங்கட்கிழமை**

**நட்சத்திரம்** : உத்தரம் இரவு 7.32 வரை அதன்பின் அத்தம்
**திதி** : திருதியை மாலை 6.38 வரை அதன்பின் சதுர்த்தி.
**சுபநேரம்** : 12.05 - 1.35 **இராகுகாலம்** : 7.35 - 9.05
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : பணவிரயம், கடன்தொல்லை, சத்துருபயம்.
**இடபம்** : பொருள் வரவு, புத்திர சுகம், குடும்பச்செலவு.
**மிதுனம்** : மனக் கவலை, வாகன நஷ்டம், இல்ல சுகக் குறைவு.
**கடகம்** : காரியத்தடை, சிறுதூரப் பிரயாணம், சகோதர சஞ்சலம்.
**சிங்கம்** : பொருள் வரவு, வாக்குச் சித்தி, குடும்பசுகம்.
**கன்னி** : மனக் குழப்பம், தேச சுகக் குறைவு, வீண் முயற்சி.
**துலாம்** : வீண்செலவு, போசன சுகக் குறைவு, பிரயாணக் கஷ்டம்.
**விருச்சிகம்** : காரிய சித்தி, பொருள் இலாபம், மூத்தோர் உதவி.
**தனுசு** : பொருள் செலவு, தொழில் சஞ்சலம், வருவாய் குறைவு.
**மகரம்** : பொருள் சேர்க்கை, தெய்வ அனுகூலம், தந்தைவழி உதவி.
**கும்பம்** : வாக்கு விரோதம், வயிற்று ரோகம், விவாகம் தடை.
**மீனம்** : புது முயற்சி, மன மகிழ்ச்சி, நண்பர்களால் நன்மை.

**- ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே நான் இலங்கைக்கு வந்தேன்!

## - யாழ்ப்பாணத்தில் உன்னிகிருஷ்ணன் தெரிவித்தார்

"இலங்கைக்கு விஜயம் செய்யும்போது தென்னிந்தியக் கலைஞர்களுக்குக் காட்டப்படும் எதிர்ப்பு எனக்கும் காட்டப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களுக்குக் கர்நாடக சங்கீதப் பயிற்சி வழங்குவதற்காக யாழப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம்



என்னை அழைத்தது. அதன்படியே நான் யாழ்ப்பாணம் செல்கிறேன் எனக் கூறினேன். தென்னிந்தியக் கலைஞர்கள் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள மக்களுக்குக் கலைச் சேவையாற்றுவதற்கான ஏற்பாட்டை நான் செய்வேன்" என்று பிரபல திரைப்படப் பின்னணிப் பாடகரும் கர்நாடக சங்கீத வித்துவானுமான உன்னிகிருஷ்ணன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தென்னிந்தியாவில் என்ன கலாச்சாரம் பின்பற்றப்படுகின்றதோ அத்தகைய கலாசாரத்தைத்தான் இங்கும் பின்பற்றுகின்றார்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இரண்டுக்குமான இடைவெளி அதிகரித்துள்ளது. இதனை மீளவும் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் இவ்வாறு எடுக்கப்படும்போதுதான் இங்கு இசையையும் வளர்க்க முடியும் இசைக் கலைஞர்களின் திறமைகளையும் வளர்க்கமுடியும்" என அவர் மேலும் கூறினார்.

தமிழ் திரையிசைப் பாடககர்களின் ஹரிகரன் மிகச்சிறந்த பாடகர் எனவும் தமிழ் சினிமாவில் நடிப்பதற்கு பாரதிராஜா, வசந்த் மற்றும் ஜீவா போன்றவர்கள் தன்னை அழைத்ததாகவும் அந்த வாய்ப்புக்களை தான் தவிர்த்துக் கொண்டதாகவும் உன்னிகிருஷ்ணன் தெரிவித்தார்.

**கேள்வி:** தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்து எமது மாணவர்களையும் கலைஞர்களையும் சந்தித்துள்ளீர்கள். இரண்டு கலைஞர்களின் வேறுபாட்டையும் எவ்வாறு உணர்கீறீர்கள்?

**பதில்:** சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் என்னுடைய கருத்துக்களை பகிர்ந்து கொள்ளமுடிந்தது. சில மாணவர்கள் என்னிடம் கேள்வி கேட்டார்கள். கருத்து வேறுபாடுகள் இருப்பதாக தெரியவில்லை. இந்தியாவைப் பொறுத்த வரையில் இதிலும் குறிப்பாக தமிழ் நாட்டில் நிறையக் கலைஞர்கள் இருக்கின்றார்கள் அவர்களுக்கென்று ரசிகர்கள் இருக்கின்றார்கள். இந்தியாவில் பல இடங்களில் பல கச்சேரிகளை நடாத்தியிருக்கின்றோம் வெளிநாடுகளுக்கும் சென்றிருக்கின்றோம் இதனால் பல அனுபங்களைப் நாங்கள் பெற்றிருக்கின்றேன். இதே மாதிரி இங்குள்ள கலைஞர்களுக்கும் இது நல்லதொரு அனுபவமாக அமையும். இந்தியாவில் இருந்து நிறையக் கலைஞர்கள் வரும் போது இங்குள்ள கலைஞர்களும் இணைந்து இசை நிகழ்வுகளைப் பண்ணும் போது அது வெற்றிகரமானதாக அமையும் அடுத்த தடவை இங்குள்ள கலைஞர்களுடன் இணைந்து இசை நிகழ்வொன்றை நடத்தலாம் என்ற திட்டம் கூட இருக்கிறது.

**கேள்வி:** இவ்வாறான கர்நாடக பயிற்சிப் பட்டறைகள் கிராமிய மட்டங்களில் முன்னெடுக்கப்படுமா?

**பதில்:** நாங்கள் மட்டும் வந்து போக முடியாது தென்னிந்தியாவில் நிறைய இசைக் கலைஞர்கள் இருக்கின்றார்கள் அவர்கள் எல்லோரும் இங்கு வரவேண்டும் என்றால் இந்திய உயர்ஸ்தானி-கர்தான் முடிவெடுக்க வேண்டும். இவ்வாறான நிகழ்வுகள் கிராம மட்டத்தில் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் நிச்சயம் இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றுவார்கள் இது நிச்சயம் வெற்றிபெறும் என்று நம்புகின்றேன்.

**கேள்வி:** ஈழத்து கலைஞர்களின் கலையுணர்வு பற்றி?

**பதில்:** இங்குள்ள கலைஞர்களின் திறமைகள் மிகச்சிறப்பாக இருக்கின்றன. அத்திறமைகளை நான் கேட்கவில்லை. எனது முன்னிலையில் எவரும் பாடுவில்லை. ஆனால் அவர்களின் ஆர்வத்தை என்னால் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இசைத் துறையில் விற்பன்னர்களாக பல கலைஞர்கள் இங்கு இருந்துள்ளார்கள் குறிப்பாக வீரமணி ஐயர், சரஸ்வதி பாக்கியராஜா, சண்முகவடிவேல் போன்றவர்களைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். தென்னிந்தியாவில் என்ன கலாச்சாரம் பின்பற்றப்படுகின்றதோ அத்தகைய கலாசாரத்தை இங்கும் பின்பற்றுகின்றார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் இரண்டுக்குமான இடைவெளி ஏற்பட்டுள்ளது. இதனை மீளவும் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் அப்போது தான் இங்கு இசையையும் வளர்க்கமுடியும். கலைஞர்களின் திறமைகளையும் வளர்க்கமுடியும்.

**கேள்வி:** சுக அனுபவ நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த உங்களிற்கு யாழ் மண்ணில் வரவேற்பு எவ்வாறு இருந்தது?

**பதில்:** மிகவும் சிறப்பாக இருந்தது இந்தளவிற்கு வரவேற்பு கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை பார்க்கும்போது மிகவும் சந்தோசமாக இருந்தது. தமிழ் மக்களுக்கு இசை மூலமாக நிறைய செய்யவேண்டும் என்ற ஆர்வத்தில் வந்திருக்கின்றேன்.

**கேள்வி:** உன்னிகிருஷ்ணன் என்ற அடையாளம் கர்நாடக சங்கீதம் மூலம் கிடைத்ததா?



அல்லது திரையிசைப் பாடல்கள் மூலம் கிடைத்ததா?

**பதில்:** உன்னிகிருஷ்ணன் என்னும் அடையாளம் கர்நாடக சங்கீதத்தின் மூலமே கிடைத்தது அதன் பின்னர் தான் திரையிசை. கர்நாடக இசையில் பாடிக்கொண்டிருந்தேன் அதன் பின்னர் தான் சினிமாவில் முதல் பாடல் பாடும் வாய்ப்பு ஏற்பட்டது. முதல் பாடல் வெற்றி பெற்றவுடன் பெரியளவில் ஒரு பெயர் கிடைத்தது. திரையிசையைப் பொறுத்தவரையில் பல லட்சம் மக்கள் கேட்கின்ற பாடல்களாக திரையிசைப் பாடல்கள் மாறியிருக்கின்றது. இந்த திரையிசையில் பலர் கர்நாடக இசையினைக் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. திரையிசையில் சிறந்த பாடகராக வரவேண்டும் என்றால் கர்நாடக இசையையும் கற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனால் இன்று பல இளைஞர்கள் கர்நாடக இசையைக் கற்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**கேள்வி:** மேலைத்தேய இசையின் ஆதிக்கத்தால் கர்நாடக சங்கீதத்தின் தாக்கம் எவ்வாறு உணரப்படுகின்றது?

**பதில்:** இரண்டையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுக் கூறமுடியாது. மேலைத்தேய இசையைப் பொறுத்தவரையில் உலகம் பூராகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாக மாறி விட்டது. கர்நாடக சங்கீதத்தைப் பொறுத்த வரையில் அது தமிழ் ரசிகர்களிடம் மட்டும் ஆதிக்கம் செலுத்துகின்றது. வெளிநாடுகளில் இசை நிகழ்வை நடத்தும் போது கர்நாடக சங்கீதத்தைப் பாடினால் அவர்களுக்குப் புரியாது. இடத்திற்கு இடம் மொழிகள் சொற்கள் மாறுபட்டது. எனவே அந்தந்த இடத்திற்கேற்ப இதன் ஆதிக்கங்கள் இருந்தே வருகின்றது.

**கேள்வி:** தமிழ் சினிமாவில் முதல் பாடல் பாடும் வாய்ப்பு எவ்வாறு ஏற்பட்டது?

**பதில்:** முதற்தடவையாக ராஜிவ் மேனன் என்னை முதலில் ஏ.ஆர் ரஹ்மானிடம் அறிமுகம் செய்து வைத்தார். என்னுடைய ஒலிநாடாவை ராஜிவ்மேனனிடம் கொடுத்திருந்தேன். அதைக் கேட்டுவிட்டு ஏ.ஆர்.ரஹ்மான் பாடுவதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுத்தார். எனக்கு சினிமாவில் பாட வேண்டும் என்ற ஆர்வம் கிடையாது. நான் போய் முற்சி செய்தேன். முதல் பாட்டு நல்ல வரவேற்பைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து இன்று வரைக்கும் 1500 பாடல்களுக்கு மேல் பாடியுள்ளளேன்.

**கேள்வி:** ஆரம்ப காலத்தில் வெளியான பாடல்களுக்கும் தற்போது வெளி வருகின்ற பாடல்களுக்கும் இடையில் கலாச்சார மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

**பதில்:** இன்று தமிழ் சினிமாவில் இருக்கின்ற இசையமைப்பாளர்கள் அனைவருமே சங்கீதத்தை முறையாக கற்றுக் கொண்டவரகள் கிடையாது. சில இசையமைப்பாளர்கள் தற்போது கற்றுக் கொண்டு வருகிறார்கள். இளைய ராஜா சேர், வித்தியாசாகர், ரஹ்மான் போன்றவர்களைச் சொல்லலாம். ராஜா சேரின் பாடல்களை யாராவது பாடிக் கேட்கும் போது புல்லரிக்கும் அந்தளவிற்கு அந்தப் பாடலில் ஈர்ப்பு இருக்கும். எல்லாமே இப்போது வேகமாக இருக்கின்றது. இதனால் அனைவரும் வேகமாக இயங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அந்த வேகத்திற்கு ஏற்ப இசையமைப்பாளர்கள் தங்களை மாற்றிக கொள்ள வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளதால் அன்று வெளியான பாடல்களுக்கும் இன்று வருகின்ற பாடல்களுக்கும் உள்ள வித்தியாசமாகும். தற்போது தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக இணையத் தளங்களில் இருந்து இசையை தரவிறக்கம் செய்து பாடல்களுக்கு இசையமைக்கும் நிலைக்கு மாறி விட்டது. இதனால் பாடல்கள் தனித்துவத் தன்மையை இழந்து விடுகின்றன. அதனால் வெளிவருகின்ற பாடல்கள் அனைத்தும் ஒரே மாதிரியானவையாக அமைந்து விடுகின்றன.

**கேள்வி:** உங்களைப் போன்று இருக்கின்ற கலைஞர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

**பதில்:** இசைக்கு முதலில் பயிற்சி அவசியமானது கர்நாடக சங்கீதத்தை எடுத்துக்கொண்டால் சங்கீதத்தில் இருக்கின்ற முறைகள், ராகங்கள், கீர்த்தனைகள் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டால் சிறந்த ஒரு இசைக் கலைஞனாக உருவாக முடியும். இளைஞர்களுக்கு நான் என்ன சொல்ல விரும்புகின்றேன் என்றால் இசையை முறைப்படி கற்றுக் கொள்ள வேண்டும். இது கர்நாடக சங்கீதமாக இருக்கட்டும் மேலைத்தேய இசையாக இருக்கட்டும். அனைத்தையும் முறையாக கற்றுக் கொள்ள வேண்டும். இப்போது இருக்கும் பாடல்களில் அனைத்து இசையும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

**கேள்வி:** முதல் தடவையாக விருது பெறும்போது உங்களின் மனநிலை எவ்வாறு இருந்தது?

**பதில்:** முதற்தடவையாக தமிழ் நாடு அரசினால் கலைமாணி விருது வழங்கப்பட்டது இதன் பின்னர் தேசிய விருது வழங்கப்பட்டது தேசிய விருது கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இது மிகப்பெரிய மகிழ்ச்சியான சந்தர்ப்பம் இதுவரை 15 விருதுகளுக்கு மேல் பெற்றிருக்கின்றேன்.

**நன்றி: இணையம்**

# எங்கு யுத்தம் நடந்தாலும் முழுமையாக பாதிக்கப்படுவது பெண்களே

## அமைச்சர் திஸ்ஸ விதாரண

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு, கண்டி எர்ல்ஸ் ரிஜென்சி ஹோட்டலில் இன்று நடத்திய சர்வதேச மாநாடு ஒன்றில் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண அவர்களிடம் "யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களது சமாதானம், பாதுகாப்பு, அபிவிருத்தி தொடர்பாக இலங்கைப் பெண்களுக்கான நிகழ்ச்சித் திட்டம்" என்ற ஓர் அறிக்கையை கையளித்தது.

இங்கு உரையாற்றிய சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்ததாவது, இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மிகப் பொருத்தமாக உள்ளன.

இதனை அமுல்படுத்துவதில் நாம் சில சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. முதலாவதாக நகரம் முதல் கிராமம் வரை அதிகாரப் பகிர்வு முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

இதற்கு பாரிய நிதி ஒதுக்கப்படுதல் வேண்டும். அடுத்ததாக, பல் இன சமூகம் வாழும் எமது நாட்டில் இனங்களுக்கு இடையிலும் சமூகங்களுக்கிடையிலும் புரிந்துணர்வையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பினால் மட்டுமே பெண்களது அபிவிருத்தியைப் பூரணமாக முன்னெடுக்க முடியும்.

உலகில் எந்த நாட்டில் யுத்தம் நடந்தாலும் எக்காலத்தில் நடந்தாலும் அதனால் அதிகமாகப் பாதிக்கப்படுவோர் பெண்களே. எனவே தீர்மானம் எடுக்கும் அமைப்புக்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். எனது கருத்தின் படி ஆகக் குறைந்தது தேர்தல்களில் 30 சத வீதமான பெண்களுக்காவது சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்றார்.

இச் சர்வதேச மாநாட்டில் அமைச்சர் திருமதி சுமேதா டீ. ஜயசேன, பாராளுமன்ற அங்கத்தவர் ரோஸீ சேனாநாயக்க, சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற லைபீரியாவைச் சேர்ந்த லெமா கோபி, டிஸ்னி நிறுவனத்தைச் சேர்ந்த அல்பியன் டிஸ்னி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் பணிப்பாளர் சுமித்திரா ரத்நாயக்கா, தலைவி விசாகா தர்மதாச மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி புதிய பொதுச்சந்தை கட்டுமானப் பணிகள் பூர்த்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கான புதிய பொதுச்சந்தை கட்டுமானப்பணிகள் பூர்த்தியாகி வரும் அதே வேளை தற்போது அம்பாள் குளத்தில் செயற்படும் கிளிநொச்சிக்கான தற்காலிக பொதுச் சந்தையை புதிய சந்தைக் கட்டடத் தொகுதிக்கு மாற்றவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. கரைச்சிப் பிரதேச சபை இந்த ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் முன்னைய பொதுச்சந்தை வளாகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் புதிய சந்தைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இச்சந்தையின் கட்டுமானப் பணிகளே பூர்த்தியாகி வருகின்றன.

இச்சந்தை நடைமுறைகள் குறித்து கரைச்சி பிரதேச சபைத் தலைவர் ந.வை.குகராசா தமிழ்நாதத்துக்குத் தெரிவிக்கையில், தற்போது அம்பாள் குளம் பொதுச்சந்தையில் நடைமுறைகள் தொழில் மேற்கொள்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் அதேவேளை, கடந்த காலங்களில் கிளிநொச்சி சந்தையில் கடைகளை நடத்தியவர்களுக்கும் உரிய ஒழுங்கின் பிரகாரம் கடைகள் வழங்கத் திட்டமிடப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து சந்தை வர்த்தகர்களுடன் புதிய சந்தை விவகாரம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# கிராம மட்ட அமைப்புகளுக்கு பொலிஸாருடன் நல்லுறவு வேண்டும்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை பொலிஸாருடன் கிராம மட்ட அமைப்புகள் நல்லுறவைப் பேணி எமது பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் குற்றச் செயல்களையும், வன்முறைகளையும் ஒழிக்க முன்வர வேண்டும் என்று வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பி.குமாரசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 23 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவர்கள், கிராம அலுவலர்கள், மதகுருமார்கள் ஆகியோர்களுக்கான சிவில் பாதுகாப்புத் தொடர்பான விசேட கூட்டம் கடந்த ஒன்பதாம் திகதி காலை 9 மணிக்கு பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இதில் சிறுவர் துஷ்பிரயோகம், களவு, கொள்ளை, கொலை போன்றவற்றைத் தடுப்பது சம்பந்தமாக விளக்கமளிக்கப்பட்டது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது அசட்டையீனமாக தனிமையில் வீடுகளில் இருக்க விட்டுத் தமது கடமைகளுக்காக வெளியே செல்லுவதாலும், அறிமுகம் இல்லாதவர்களை நம்பிக்கை வைத்து பொறுப்பில் செல்லுவதாலும் சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றனர். மேலும் எமது பகுதிகளில் அந்நியர்களின் நடமாட்டம் அதிரித்துள்ள நிலையிலும் உங்களது கிராமம் வீடுகளுக்கு வியாபரம் நோக்கமாகவே அல்லது ஏனைய விடயங்களுக்காகவே அனுமதியின்றி உள்நுழைந்து வீட்டின் நிலைப்பாட்டை பகல் 'வேளைகளில் அவதானித்த பின்னர் இரவு நேரத்தில் திருடராக வந்து தமது கைவரிசையைக் காட்டக்கூடும். இதுபோன்ற திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடைய 4 நபர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு இன்னமும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மாணவ மாணவிகளுக்கு திணிக்கப்படும் வன்முறைகளில் இருந்து பாதுகாக்க கிராம மட்ட பொது அமைப்புக்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் விழிப்பாக இருக்க வேண்டும். அப்போது தான் எமது பகுதியில் நிகழும் வன்முறைகள், குற்றச் செயல்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க முடியும். மக்கள் உதவினால் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு இலகுவாக அமையும். எனவே உங்களது பகுதியில் நடைபெறுகின்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் 021 2263573 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு சரியான தகவல்களை தரும்பட்சத்தில் உடனடி நடவடிக்கைகள் எம்மால் எடுக்க முடியும் என்றும் பொலிஸ் அதிகாரி கூறினார்.

# பொலிகண்டியில் படகுகள் எரிக்கப்படுகின்றன

(வல்வெட்டித்துறை)

பொலிகண்டி மாதா கோவில் முன்றலில் உள்ள படகுகள் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாகப் பட்டப்பகலில் நாசகார சக்திகள் திட்டமிட்டு எரித்து வருகின்றனர். குறித்த பகுதியில் 2004 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சுனாமியால் சேதமடைந்த படகுகளைத் திருத்தியமைக்கும் பணிகளை அரசசார்பற்ற நிறுவனமான 'உலகதரிசனம்' மேற்கொண்டு வந்தது. அதன் பணிகள் நிறைவுபெற்ற பின் இப்பகுதியில் சுமார் ஏழு சேதமுற்ற படகுகள் இருந்தன. சுமார் 5 வருடங்களுக்கு மேலாக இப்படகுகள் குறித்த பகுதியில் உள்ளன. இவை உரிமையாளர்களால் உரிமை கோரப்படாததால் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இனம் தெரியாத நாசகார சக்திகள் இதனை எரித்து வருவதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

உரிமையாளர்கள் எவரும் முறைப்பாடு செய்யாத காரணத்தால் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாது எனப் பொலிஸார் கூறுகின்றனர். ஆலயத்துக்குச் சென்று வழிபட அப்பகுதி மக்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# உள ஆற்றுப்படுத்தல் கற்கைநெறி

(உடுவில்)

துளிர்கள் நிறுவனம் நடாத்தும் இலவச உள ஆற்றுப்படுத்தல் வாண்மைத்துவச் சான்றிதழ் கற்கை நெறி பயில விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இச்சான்றிதழ் கற்கை நெறியில் க.பொ.த.சாதாரண தகைமையுடைய இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், துளிர்கள் நிலையம், இல.30 வளாக வீதி, திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


இவ் உள ஆற்றுப்படுத்தல் வாண்மைத்துவச் சான்றிதழ் கற்கை சனி மற்றும் ஞாயிறு தினங்களில் ஆறு மாதங்கள் நடைபெறும் எனவும், ஏற்கனவே ஒன்பது பிரிவுகளுக்கு இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை அபிவிருத்தி

(உடுவில்)

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி மெடிஸ்த மிஷன் வித்தியாலய ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இப்பாடசாலையில் மாணவர்களுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஐந்து இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




'பருத்தித்துறையூராம்' நூல் வெளியீட்டு விழாவில் திருமதி ரஞ்சினி கௌரிபாலா வரவேற்புரை நிகழ்த்துவதையும், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் உரையாற்றுவதையும், நூலாசிரியர் இரகுவரன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர்) பிரதம விருந்தினரான வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் பொ.சத்தியசீலனுக்கு நூலின் முதற்பிரதியை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(பருத்தித்துறை நிருபர்)

தமிழ்நாதம்
Thamil Naatham
ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி திங்கட்கிழமை

## ஆணாதிக்க சிந்தனையும் பெண்நிலைவாதிகளும்

"தேர்தல்கள் மூலம் தெரிவுசெய்யப்படும் சபைகளுக்கு முப்பது சதவீதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும்" இப்படி தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டி முன் தோன்றி தான் தெரிவித்தபோது அக் கமிட்டியில் அங்கம் வகித்த பெண் எம்.பிக்கள் சிலர் பத்து சதவீதம் போதுமென்று தெரிவித்தார்களாம். இவ்வாறு அமைச்சர் திஸ்ஸ விதாரண அண்மையில் தெரிவித்திருந்தார். "சமாதானம், பந்தோபஸ்து, அபிவிருத்தி ஆகியன பற்றிய இலங்கை மகளிரின் நிகழ்ச்சி நிரல்" என்ற ஆவண வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் திஸ்ஸ விதாரண இந்த உண்மையை அம்பலப்படுத்தினார்.

இவ்வாறு பெண் எம்.பி.க்களே கூறியதைக் கேள்விப்பட்டதும் தான் அதிர்ச்சி அடைந்தாகவும் அமைச்சர் சொன்னார். தென்னக்கும்பரவில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அமைச்சர் உரையாற்றியபோது முன்னாள் லைபீரிய ஜனாதிபதியும், நோபல் பரிசு பெற்றவருமான நெக்மா கௌபியும் அந்தக் கூட்டத்தில் இருந்தார். உலகளாவிய ரீதியில் பெண்களின் வலுவூட்டலுக்காக பாரிய பணிகளை மேற்கொண்ட ஒரு பெண்மணி அவர்.

இலங்கைப் பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் என்றெல்லாம் பெண்களின் பிரதிநிதித்துவம் ஐந்து சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளன. முன்னைய பாராளுமன்றத்தில் இருந்ததைவிட தற்போதைய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெண்களின் சதவீதம் மிகவும் குறைவானதாகும். இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு போன்ற நாடுகளிலெல்லாம் உயர் அதிகார சபைகளில் அங்கம் வகிக்கும் பெண்களின் எண்ணிக்கை இலங்கையை விட அதிகமானதாகும். பெண்கள் வலுவூட்டலுக்கென பாரிய நடவடிக்கைகள் இந்த நாட்டில் எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. மகளிருக்கென பிரத்தியேகமான அமைச்சு ஒன்று ஆரம்பிக்கப்பட்டே இருபதுக்கு மேற்பட்ட வருடங்கள் எமது நாட்டில் கடந்துவிட்டன. இருந்தாலும் பாராளுமன்ற அங்கத்தவர்களான பெண்களுக்கே அவர்களின் விடிவுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தெரியாமலிருப்பது வேதனைக்குரியது.

இந்த நாட்டில் கல்வித் துறையை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் மாணவர்களைவிட மாணவிகளே கூடுதலாகப் பரீட்சைகளில் சித்தி பெறுகிறார்கள். பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதிலும் அவர்களே முன்னணியில் திகழ்கிறார்கள். இருந்தபோதும் சமூகத்தில் நிலவும் ஆணாதிக்க சிந்தனைகள் பெண்களை மட்டம் தட்டுபவையாக அமைந்துள்ளன.

தாய் வழிச் சமூக அமைப்பு நிலவிய காலத்தில் பெண்களே குடும்பத் தலைவிகளாக இருந்திருக்கிறார்கள். கால ஓட்டத்தில் ஏற்பட்ட நிலப்பிரபுத்துவ சிந்தனைகள் பெண்களை கட்டுப்பெட்டிகளாக ஆக்கி வைத்திருக்கின்றன. சமூக மேல் மட்டத்தில்தான் பெரும்பாலும் பெண் நிலைவாத அமைப்புகள் தோற்றம் பெறுகின்றன. குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள் இருந்து கொண்டுதான் இந்தப் பெண்நிலைவாதிகள் பெரும்பாலும் கூக்குரலிடுகிறார்கள். சமூகத்தின் கீழ்மட்டத்தில் அன்றாடம் காய்ச்சிகளாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்களே சமூக ஒடுக்குமுறைகளால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். சில பெண்ணிலைவாதிகள் பெண்களின் விடுதலைக்காக போராடுகிறோம் என்று கூறிக்கொண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை நடத்துகிறார்கள். இந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு பெருந்தொகைப் பணம் உலக நிறுவனங்களிலிருந்து கிடைக்கிறது. சமூகத்தில் அரசியல், பொருளாதார, கலாசார ரீதியாக பெரும்பாலும் சுரண்டப்படும் பெண்கள் அடிமட்ட வர்க்கத் தட்டுகளைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஒரே வேலைக்கு சமசம்பளம் வழங்கப்படுவதில்லை. ஆணுக்கொரு சம்பளம், பெண்ணுக்கொரு சம்பளம் என்று தர வேறுபாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இலங்கை தோட்டத் தொழிற்துறையைச் சார்ந்த பெண்கள் சந்திக்கும் அவலங்கள் சொல்லிமாளாது. பல லட்சக் கணக்கான பெண்கள், பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் செல்கிறார்கள். இவர்கள் ஈட்டித்தரும் அந்நியச் செலாவணி இலங்கையின் கஜானாவுக்குள் நிறைந்தே காணப்படுகிறது. ஆனால் இவர்கள் சந்திக்கும் அவலங்களையும், துயரங்களையும் குறைப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுவதில்லை. வர்க்கம் சார்ந்த முரண்பாடுகள் சமூகத்தை சீர்குலைப்பதைப் போன்று ஆண், பெண் பேதங்களும் அன்று தொட்டு இன்றுவரை தொடர்ந்தே இருந்து வருகின்றன.

நாட்டில், சமூகத்தில் கொள்கைகளைத் தீர்மானிக்கும் கட்டமைப்புகளில் பெண்கள் தமது பிரதிநிதித்துவத்தை உயர்த்திக் கொள்ளாதவரை ஆணாதிக்க சிந்தனையே வெற்றிநடை போடும். மேல்மட்டப் பெண்நிலைவாதிகளின் 'போர்மியூலா' சங்கங்கள் எழுப்பும் குரல்களால் எதுவுமே ஆகிவிடப் போவதில்லை.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# சர்ச்சையின் விளைவு திரண்டது திறனாய்வு

கட்டுரைகள் மூலமாகத் தாக்கிக் கொண்ட ஜாம்பவான்கள், தனிப்பட்ட முறையில் ஒருவிதக் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல்தான் இருந்திருக்கிறார்கள். அந்த விவரங்களை, அதாவது, சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தவற்றை இப்போது பார்க்கையில் அம்மேலோர் எவ்வளவு திடமாகத் தாங்கள் நம்பியதை எழுதினார்கள் என்பது தெரிகிறது.

இலங்கையிலிருந்து வ.ரா. சுதேசமித்திரனுக்கு எழுதிய கட்டுரை டிசம்பர் 14, 1935 அன்று பிரசுரமானது. அது ஒரு நீண்ட கடிதம். அதில் அவர் தான் கூறிய "ஒரு வரிக்கு ஈடாகாது" என்ற சொற்கோவையை மட்டும் எடுத்துக்கொண்டு, கல்கி எழுதியதற்குப் பதிலாக இவ்வாறு கூறுகிறார்: "ஒரு வரி, ஒரு வரியென்று அதைப் பிடித்துக் கொண்டு தொங்க வேண்டாம். ஒரு குதிரை, ஒரு குதிரை ஒரு ராஜ்ஜியத்துக்கு ஒரு குதிரை என்று அவதிப்பட்ட 3ஆவது ரிச்சர்ட் தனது பட்டத்தை இழந்தான். (The reference is from Richard III the play by Shakespeare; Richard is unhorsed on the field at the climax of the battle, and cries out, "A horse, a horse, my kingdom for a horse!" Richmond kills Richard in the final duel). ஒரு வரி, ஒரு வரி என்று வேறு எதுவும் அகப்படாமல் அதைப் பிடித்துக் கொண்டு தொங்கினால் அது அறுந்து விழுந்து காயம் ஏற்பட்டாலும் ஏற்படும். அந்தக் கம்பங்கூத்தாடி வித்தை வேண்டாம். என்று அதை ரா.கி. விட்டு விடுவாராக."

வேடிக்கை என்னவெனில் அக்காலத்துத் தமிழ் எழுத்தாளர்கள் எல்லாரும் சில பேர்களைத் தவிர ஆங்கில இலக்கியத்திலும் புலமை பெற்றவர்கள். ஆகையால் சாதாரணமாகவே இலக்கியத் தொடர்பு கொண்ட ஆங்கிலச் சொற்றொடர்களைப் பயன் படுத்தினார்கள். அந்த வகையில் வ. ரா. கடிதத்தில் "ப்ரோமெதியஸ் அன்பவுண்ட்" என்ற சொற்றொடரைப் பயன் படுத்துகிறார்!

கிரேக்க புராணத்தின் படி, ப்ரோமெதியஸ் என்ற வீரன், டைடனின் குமாரன். மனித குலத்திற்காகப் போராடியவன். தேவலோகத்திலிருந்து ஜீயஸின் தெய்வீக அக்னியைத் திருடிக் கொண்டு வந்தவன். ஆகையால் தண்டிக்கப்பட்டவன். அவனை ஒரு பெரிய பாறையில் கட்டி வைத்துத் தினமும் கழுகுகள் அவனது ஈரலைத் தின்னும்படி செய்யப்பட்டான். ஆனால், கழுகு தின்றவுடன் அவனது ஈரல் மறுபடியும் வளர்ந்து விடும். பிறகு அவன் விடுவிக்கப்பட்டான். அது ப்ரோமெதியஸ் அன்பவுண்ட் என்ற கதையில் வருகிறது. இதைத்தான் வ.ரா. இங்கு குறிப்பிடுகிறார். அதன் காரணம் கல்கி, "பாரதியின் எல்லா நூல்களையும் டால்ஸ்டாய் நெருப்பில் போட்டுக் கொளுத்தியிருப்பார்" என்று சொன்னதுதான்! அம்மாதிரியான ஒரு தெய்வீக அக்னியைக் கொண்டுவந்து பாரதியின் படைப்புகளை டால்ஸ்டாய் தீக்கிரையாக்கினால் பரவாயில்லை என்று சொல்கிறார்! "தெய்வீகக் கனலை வைத்துக் கொளுத்துவதாக இருந்தால் பாதகமில்லை" என்கிறார்! (டால்ஸ்டாயைப் பற்றி கல்கி சொன்னது சுதேசமித்திரன் 1935 டிசம்பர் 7 அன்று "டால்ஸ்டாய் ஒரு மஹான். ஆனால் அவர் ரசிகருமல்ல, கவியுமல்ல. முதன்மையாக அவர் ஒரு சன்மார்க்கப் போதகர் சீர்திருத்தக்காரர் என்று தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். பாரதியாரின், "எந்த நேரமும் நின்மையல் மீறுதடி குறவள்ளி சிறுகள்ளி" என்ற பாட்டை டால்ஸ்டாயிடம் கொடுத்திருந்தால் அவர் "பாரதியாரின் புத்தகங்கள் எல்லாவற்றையும் நெருப்பு வைத்துக் கொளுத்த வேண்டும்" என்ற அபிப்பிராயம் கொண்டிருப்பார்.)

பல வருடங்களுக்குப் பின்னரும், அதாவது ஜனவரி 2003இல், சுமார் 68 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த இந்த நிகழ்வுகளை நினைவு கூட்டி, பாரதிக்குத் தமிழர்கள் செய்யவேண்டிய தொண்டைக் குறிப்பிட்டு, பேராசிரியர் கா.சிவத்தம்பி இலங்கையிலிருந்து சிட்டிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார். அதில் சிட்டியும் கு.ப.ரா.வும் செய்த தொண்டைக் குறிப்பிடுகிறார்.

இப்போது இந்தத் தர்க்க மேடையில் அதாவது மணிக்கொடி குழுவின் ஒரு புனிதப் போரில் பிரவேசிக்கும் சிட்டி, சற்றும் இலக்கியத்தரம் குறையாமல், "பாரதியும் இலக்கிய விமர்சனமும்" என்ற கட்டுரையை எழுத அது சுதேசமித்திரன் டிசம்பர் 21, 1935 இதழில் பிரசுரமாயிற்று.

இந்த விவகாரம் பலருக்கும் தெரியும். ஆனாலும் ஒரு பதிவு செய்துதான் ஆகவேண்டும். அதாவது இந்தத் தர்க்க உத்வேகத்திலும், தமது நோக்கினை மறக்காது தர்க்கத்தையே சரியான திசையில் செலுத்திச் சென்றவர் சிட்டி தான். அவரது கட்டுரைகள் அவர் கற்ற ஆங்கிலத் திறனாய்வு, மற்றும் பாரதி பக்தி இரண்டும் கலந்து, விருப்பு வெறுப்பின்றி எழுதப்பட்டுள்ளன. தன்னை அறிமுகப் படுத்திகொள்ளும் போதே சிட்டி சொல்கிறார்: "வ ரா.வுக்கு நமஸ்காரம் செய்து நேர்முகமாகப் பேசும் ரா.கி. யின் பேச்சுக்கிடையில் வருமுன் நான் என்னைப் பற்றியும் கொஞ்சம் சொல்லிக்கொண்டால் தான் நீ யார் என்ற கேள்விக்குப் பதிலளிக்கத் தகுந்தவனாவேன்.

நான் ஷேக்ஸ்பியரையும் ஷெல்லியையும் கடுமையாகப் படித்தேன். தாகூரை என் ரசிகத் திறன் சோதனைக்காகப் படித்தேன். பாரதியை சந்தோஷத்திற்காகவும், ஆத்ம திருப்திக்காகவும் படித்தேன். (குட்டிச் சுவராகப் போனாலும் பரவாயில்லை) இந்த நான்கு கவிகளின் கற்பனையையும் அலசிப் பார்த்துவிடவில்லை. ஆயினும் பரீட்சை தேறுவதற்காக ஷேக்ஸ்பியரைப் பற்றிய ஆராய்ச்சிகளையும், ஷெல்லி பற்றிய விமர்சனங்களையும் படிக்க நேர்ந்தது.

"என்னவிருந்த போதிலும், ஒப்பிட்டுப் பார்த்தால், பாரதி தற்சமயம் வெறும் பெயர்தான் என்பதை மறக்க முடியாது. அவரது மேதைமையை முற்றிலும் சோதித்து அறிந்து விட்டதாக சொல்வது அகம்பாவம் தான் ஆகும். சூரியன் இவ்வளவு யுகங்களாக இருந்து வருவதோடு, இவ்வளவு ஒளி கொடுப்பதில் சூரியனை விட பெரிய நட்சத்திரம் இருக்கமுடியாதென்று சொல்வது புத்திசாலித்தனமான பேச்சு என்போமா? பாரதி புது நட்சத்திரம். அவருடைய முழு ஒளியை நாம் பெறுவதற்கு ஷெல்லி, ஷேக்ஸ்பியர், தாகூர் மூவருடைய மேதையைப் பரிசீலித்து ஆக வேண்டும்".

சிட்டி எழுதியது இன்று படிக்கையிலும் இன்பம் தருவது. இளங்கோவனும் பி.எஸ். ராமையாவும் எழுதியவை அவ்வாறிருக்கவில்லை. அவர்கள் கல்கியைத் தாக்கித்தான் எழுதினார்கள். புதுமைப் பித்தனும் கல்கியைத் தாக்கி எழுதியுள்ளதாகச் சிட்டி சொன்னார். ஆனால் அவ்விவரம் எனக்குச் சரியாகத் தெரியவில்லை.

சிட்டிக்குக் கொழும்பிலிருந்து வ. ரா எழுதிய மற்றொரு முக்கிய கடிதமும் இப்போது கிடைத்துள்ளது.

அது 23.07.1936 அன்று எழுதப்பட்டது. அப்போது தான் சிட்டிக்கு விவாகம் ஆகி ஒரு வருடமாயிருந்தது. இலங்கையில் வ.ரா. தமது 47 ஆவது வயதில் புவனேஸ்வரி என்ற ஒரு வட இந்தியப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட வருடம். வாழ்த்துகள் அனுப்பிய சிட்டி தம்பதிகளுக்கு இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் சில முக்கிய விஷயங்களும் காணப்படுகின்றன. அவரது சென்னை திரும்ப வேண்டுமென்ற ஆவலும் அதில் தெரிகிறது.. சிட்டி தம்பதிகளுக்கு என்று தான் ஆரம்பிக்கிறார். அதில் அவர் குறிப்பிடுவது.

"உங்களுடைய இரண்டு நமஸ்காரங்களையும் அப்படியே எனது "உயர்ந்த பாதி"க்கு கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டேன். எனக்கு ஒரு நமஸ்காரமும் கிடைக்கவில்லை. என்னுடைய மூளை உண்மையிலேயே கொதித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம். என் கலியாண விஷயத்தை ஒருவருக்குமே நான் தெரிவிக்கவில்லை. "வீரகேசரியில் தான் பிரசுரம் செய்தேனா? இல்லை. கொழும்பிலும் ஒருவருக்கும் தெரியாது. இரண்டொருவருக்குத்தான் துவக்கத்தில் தெரியும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அது பரவி விட்டது. விளம்பரம் பிடிக்கவில்லை. வாழ்க்கையை வாழ்ந்து காண்பித்தால் அதுவே தலைமுறை தலைமுறையாக ஜில்லா ஜில்லாவாக பரவி விளம்பரமாகி வரும் என்பது என் சித்தாந்தம்." கடிதத்தை முடிக்கையில், "சென்னைக்கு வந்து எவ்வளவோ செய்ய வேண்டும்" என்கிறார்.

(7ஆம் பக்கம் பார்க்க)

# டெசோ மாநாட்டுத் தீர்மானங்களில் சில தமிழக காங்கிரஸூக்கும் ஏற்றதாம்

- ஞானதேசிகன்

கடந்த 12ம் திகதி சென்னையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடை பெற்ற டெசோ மாநாட்டில் நிறைவேற்றப் பட்டபல தீர்மானங்களில் எங்களுக்கும் உடன்பாடு உண்டு என தமிழககாங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.


காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் கொண்டாடப்பட்ட, மறைந்த காங்கிரஸ் தலைவர்கள் சத்தியமூர்த்தியின் 125-வது பிறந்தநாள் மற்றும் ஜி.கே.மூப்பனாரின் 81-வது பிறந்தநாள் விழாக்களில் கலந்து கொண்ட தமிழககாங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தலைமையில் இருவரது உருவபடங்களுக்கும் மாலை அணிவித்து காங்கிரசார் மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் ஞானதேசிகன் நிருபர்களிடம் கூறியதாவது:-

டெசோமாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களில் எங்களுக்கும் உடன்பாடுஉண்டு.

இலங்கையில் தமிழர்களும் சம உரிமையுடன் வாழ்வது, இராணுவத்தை திரும்பப் பெறுதல் போன்ற நடவடிக்கையை நாங்களும் வலியுறுத்துகிறோம்.

தமிழர்கள் வாழும் பகுதியில் ரயில் பாதைகள் அமைக்கும் பணிமத்திய அரசு உதவியுடன்



நடக்கிறது.

தமிழர்கள் மறுவாழ்வுக்காக மத்திய அரசு தேவையான உதவிகளை செய்துவருகிறது. இவ்வாறு கூறினார்.

# பரு.சிக்கன கடன் வழங்கும் சங்கத்தின் வெள்ளி விழாவும் மலர் வெளியீடும்

**பருத்தித்துறை**

பருத்தித்துறை புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழா வும் மலர் வெளியீடும் சங்க மண்டபத்தில் தலைவர் கே.தங்கராஜா தலைமையில் நடைபெற்றது.

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்திலிருந்து விருந்தினர்கள் மேள, தாள வாத்தியங்களுடன் விழா மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

சங்கத் தலைவர் தங்கராஜா சங்கக் கொடியையும், பிரதம விருந்தினரான யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் கூட்டுறவுக் கொடியையும் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

சங்க உப தலைவர் எஸ்.ஜெய நிர்மலன் வரவேற்புரையையும் சிவஸ்ரீ.எஸ். வேதாரணியக் குருக்கள் ஆசியையும் வழங்கினர்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளும் பொருளாதார மேம்பாடுகளும் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். வெள்ளிவிழா மலர் வெளியீட்டுரையை நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் எஸ். கண்ணதாசன் நிகழ்த்தினார்.

சட்டத்தரணி ஜீ.இராஜகுலேந்திரா மலர் ஆய்வுரை நிகழ்த்தினார். ஏற்புரையை ஏ.தர்மலிங்கம் நிகழ்த்தினர். மூத்தோர் ஏற்புரையை ஏ. தர்மலிங்கம் நிகழ்த்தினார்.

# கிளிநொச்சியில் கிராம அபிவிருத்திச் சங்கநிர்வாகிகள் தெரிவு

**கிளிநொச்சி**

பலவித பிரச்சினைகளுக்கும் நெருக்கடிக்கும் ஆளாகியுள்ள கிளிநொச்சி நகர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கான புதிய நிர்வாகத்துடன் தெரிவை செப்டெம்பர் நாலாம் திகதி நடத்த கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் முடிவு செய்துள்ளார்.

இது சம்பந்தமான பொதுக்கூட்டம் கிளிநொச்சி நகர் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இடம் பெற்றபோது தற்போதைய கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகம் தொடர்பான பலவித முறைப்பாடுகள் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இச்சங்கத்திற்கு புதிய நிர்வாக சபை ஒன்றைத் தெரிய எதிர்வரும் மாதம் 4ஆம் திகதி மேற்கொள்ள முடிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வலிகாமம் கல்விவலய விஞ்ஞானப் போட்டி

**உடுவில்**

வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்மொழி மூலம் தரம் 6ல் முதலாமிடத்தினை திவானா அருந்தவராஜா (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) இரண்டாமிடத்தினை சண்முகராசா தனோஜிதன் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) மூன்றாமிடத்தினை வக்சியா கிருஷ்ணராஜா (யா/மானிப்பாய் மகளீர் கல்லூரி) ஆகியோரும்

தரம் 7ல் முதலாமிடத்தினை மரியதாஸ் ஜெனங்சனோஜன் (யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலை) இரண்டாமிடத்தினை தியாகராஜா கிரிதரன் (யா/சங்காணை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), மூன்றாமிடத்தினை தர்மசீலன் திலஷனா (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரும்.

தரம் 8ல் முதலாமிடத்தினை கிருஷாலினி இராமச்சந்திரன் (யா/உடுவில் மகளீர் கல்லூரி), இரண்டாமிடத்தினை அபர்னா கருணாகரன் (யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி) மூன்றாமிடத்தினை சுடர்மணி கமிலன் (யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரும்

தரம் 9ல் முதலாமிடத்தினை கேசிதா தனஞ்சேயன் (யா/உடுவில் மகளீர் கல்லூரி), இரண்டாமிடத்தினை கீர்த்தனா திருச்செல்வம் (யா/வட்டு மத்திய கல்லூரி) மூன்றாமிடத்தினை யசோதா கணேசநாயகம் (யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரும்

தரம் 10ல் முதலாமிடத்தினை நிவேனிகா மனோகரன் (யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), இரண்டாமிடத்தினை தேவதாஸ் கோகிலன் (யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி) மூன்றாமிடத்தினை ரீவிகா வாமதேவன் (யா/சங்காணைச் சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்) ஆகியோரும்

தரம் 11ல் முதலாமிடத்தினை தேவராசா சுஜீந்தன் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), இரண்டாமிடத்தினை திருலோகநாதன் சிந்துஜன் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), மூன்றாமிடத்தினை நவனீதா சிவநேசநாதன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரும்

ஆங்கில மொழி மூலம் தரம் 6ல் முதலாமிடத்தினை கபிலா ஸ்ரீதரன் (யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி) இரண்டாமிடத்தினை சானுஜா பாக்கியநாதன் (யா/சுன் னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) மூன்றாமிடத்தினை பவதாரணி கருணாதரன் (யா/மானிப்பாய் மகளீர் கல்லூரி) ஆகியோரும்.

தரம் 7ல் முதலாமிடத்தினை தவபாலரட்ணம் றேனுஜன் (யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), இரண்டாமிடத்தினை சங்கீதராணி கோவிந்தராஜன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), மூன்றாமிடத்தினை (யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி) ஆகியோரும்

தரம் 8ல் முதலாமிடத்தினை லோகேஸ்வரன் ஸ்ரீகர்ஷன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி) இரண்டாமிடத்தினை தர்ஷிகா ரவிச்சந்திரன் (யா/மானிப்பாய் மகளீர் கல்லூரி) மூன்றாமிடத்தினை கிருபாகரன் வினோஜன் (யா/தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி) ஆகியோரும்.

தரம் 9ல் முதலாமிடத்தினை கஜராணி இளமுருகன் (யா/மானிப்பாய் மகளீர் கல்லூரி), இரண்டாமிடத்தினை ரம்யா உதயகுமார் (யா/மானிப்பாய் மகளீர் கல்லூரி) மூன்றாமிடத்தினை யோகநாதன் ஐங்கரன் (யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரும்

தரம் 10ல் முதலாமிடத்தினை கார்த்திகாயினி ரவீந்திரன் (யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), இரண்டாமிடத்தினை சிந்துஜா சோமசுந்தரம் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி) மூன்றாமிடத்தினை தரண்யா மணிசேகரன் (யா/தெல் லிப்பழை மகாஜனாக்கல்லூரி) ஆகியோரும்

தரம் 11ல் முதலாமிடத்தினை விருத்திகா செந்தூர்ச் செல்வன் (யா/உடுவில் மகளீர் கல்லூரி)

தரம் 11ல் முதலாமிடத்தினை விருத்திகா செந்தூர்ச் செல்வன் (யா/உடுவில் மகளீர் கல்லூரி) இரண்டாமிடத்தினை தனுசியா கருணாகரன் (யா/மானிப்பாய் மகளீர் கல்லூரி) மூன்றாமிடத்தினை மதுவந்தி பாலச்சந்திரன் (யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரும் பெற்றுள்ளார்கள்.

# சர்சையின் ....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சென்னைக்கு வரவேண்டுமெனத் துடித்துக் கொண்டிருந்தார்.

ஆயினும் அப்போதைக்கு ஒன்றும் சரியாக அமையவில்லை.

கு.ப.ரா.வுக்கு 1935 டிசம்பர் 3, அன்று எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "இன்னும் நாலைந்து மாதம் கொழும்பில் இருப்பேன்.

'ஒரு வருட ஒப்பந்தத்தின் பேரில் இங்கு வந்தேன்.

அது முடியும் முன்னரே, இந்தியாவுக்குத் திரும்பி வந்து விட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கின்றேன்.

ஏதோ பக்குவமான வேலை தமிழ் நாட்டில் செய்யலாம் போல அறிகுறிகள் காணப்படுகின்றன.

விவரமாக அதைப் பற்றி எழுதமுடியாவிட்டால், நேரில் வந்து சொல்லுகிறேன்."

ஆனால் உடனே அவர் இந்தியா திரும்பிவிடவில்லை. சிட்டிக்கு அவர் எழுதிய கடிதத்தில் கண்டது போல, அடுத்த வருடமே அவருக்குக் கொழும்பு நகரத்திலேயே திருமணமாகிவிட்டது.

**நரசய்யா,**

**நன்றி : இணையம்**

# கழுகுக் கண்கள்

இலங்கையின் நீர்த்தேக்கங்களில் இருக்கும் பகுதியில் மேல் பறந்து சென்ற நான் நீர்த்தேக்ககங்களில் நீர் மட்டம் வற்றி அவை வரட்சியாக இருப்பதைப் பார்த்து கண்ணீர் சிந்தி வேதனைப்பட்டேன்.

இவ்வாண்டில் என்றுமில்லாதவாறு நாட்டில் வரட்சி கோரத்தாண்டவம் ஆடுகிறது. வரட்சி காரணமாக நாட்டின் நாலா பக்கங்களிலும் உள்ள 5 ஆயிரம் குளங்கள் முற்றாக வற்றிப்போயுள்ளன. இது பற்றி கமநல சேவைகள் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சின் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் பாரிய நீர்த்தேக்கங்களான பொலன்னறுவையில் இருக்கும் பராக்கிரமபாகு சமுத்திரம், அநுராதபுரத்தில் உள்ள கலாவெல நீர்த்தேக்கம் ஆகியவற்றின் நீர்மட்டமும் பயங்கரமான அளவுக்கு வீழ்ச்சியடைந்திருப்பதாக கூறினார்.

மணல் விற்பனையில் கொள்ளை இலாபம் ஈட்டும் சில சமூக விரோதிகள் அங்கீகரிக்கப் பட்ட அளவை விட கூடுதலான அளவில் ஆற்று மணலை அகழ்ந்து எடுப்பதனால்தான் இன்று நாட்டில் வரட்சி ஏற்பட்டிருக்கிறதென்றும், இதனால் ஆறுகளுக்கு ஊற்றெடுக்கும் நீரின் அளவு பெருமளவில் குறைந்து வருகிறது என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இன்று அதைவிட மோசமான ஒரு செயற்பாட்டில் சில பொறியியலாளர்களின் தவறான யோசனைகளின் கீழ் வரண்டுவிட்ட நீர்த்தேக்கங்களின் அடிமட்டத்தில் இருக்கும் சேற்றையும், குப்பைகளையும் மற்றும் பொலித்தீன் பைகளை அகற்றிவிடும் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இந்த பணியை தொழிலாளர்கள் இயந்திரங்களின் உதவியின்றி கைகளாலேயே எடுத்து அகற்ற வேண்டும் என்றும் அவ்விதம் செய்யாவிட்டால் வாவிகளின் அடிமட்டத்தில் நீர் கசிந்து பூமியில் சங்கமிப்பதற்கு இருக்கும் பாதுகாப்பு அரண்ள் சிதைந்துவிடும் என்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

இன்று பல இடங்களில் பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தியே நீரின்றி வரண்டு கிடக்கும் நீர்த்தேக்கங்களில் அடிமட்டத்தில் சேரும் ஏனைய குப்பைகளும் அகற்றப்படுகின்றன. அவ்விதம் பாரிய இயந்திர உபகரணங்களை பயன்படுத்தும் போது நீர்த் தேக்கங்களின் அடிமட்டத்தில் உள்ள சீமெந்து மூலாம் பூசப்பட்டது போன்ற பாதுகாப்பு அரண் வெடிப்பெடுக்கும் என்றும் அந்நிலை ஏற்பட்டால் நீர்த்தேக்கங்களில் உள்ள நீர் சிறிது சிறிதாக பூமிக்கு அடியில் கசிந்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வற்றிவிடும் என்றும் எச்சரிக்கை செய்யப்படுகின்றது.

பண்டைய மன்னர் காலத்தில் இருந்த கட்டிடக்கலை நிபுணர்கள் நீர்த்தேக்கங்களை அமைக்கும் போது அதன் அடிமட்டத்தில் சீமெந்தை விட வலுவான ஒரு பொருளை பூசி நீர்த்தேக்கத்தில் தேங்கி நிற்கும் நீர் பூமிக்குள் வடிந்துவிடுவதை தவிர்க்கக் கூடிய வகையில் பாரிய நீர்த்தேக்கங்களை அமைத்தார்கள். அதனால்தான் இந்த நீர்த் தேக்கங்கள் பல நூற்றாண்டுகளாகியும் வரண்டு விடாமல் நீரைத் தாங்கி வைத்து எமது நாட்டின் விவசாயத்துறைக்கு அந்த நீரைப் பயன் படுத்துவதற்கு உதவி செய்தன.

இன்று மனிதன் மரங்களை வெட்டியும், ஆற்றுப்படுக்கையில் உள்ள மணலை வெட்டி அகற்றி கொள்ளை இலாபம் திரட்டியதனாலும் நாட்டில் வரட்சியும் நீர்த்தேக்கங்களுக்கு நீர் மட்டம் குறைந்தும் நதிகளுக்கு ஊற்றெடுக்கும் நீர் குறைந்தும் வருகின்றது.

வரட்சியினால் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கின்றார்கள். இவர்களுக்கு திறைசேரி நிவாரணம் அளிப்பதற்காக 3 ஆயிரத்து 765 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. வரட்சி நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதனால் நிவாரணம் கோரும் விவசாயிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது.


சமீபத்தில் ஓர் இடத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அவர்கள் இவ்வளவையும் செய்து முடித்த என்னால் காலநிலையை மாற்றி பருவ மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொடுத்து எங்கள் நாட்டின் நீர்த்தேக்கங்களையும் வாவிகளையும் நிரம்பி வழியச் செய்ய முடியாது இருக்கிறேன் என்று சற்று வேதனையுடன் கூறியிருக்கின்றார். எவ்வாறாயினும் நாட்டு மக்களுக்கு தேவையான அரிசியையும் ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் அரசாங்கம் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பது ஒரு பாராட்டத்தக்க விடயமாகும்.

எவ்வாறாயினும் தெய்வங்களினதும் மும்மணிகளினதும் அனுக்கிரகத்தை கொண்டுள்ள எங்கள் தாய்நாட்டில் மீண்டும் மிகப்பெரிய பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக விரைவில் பருவ மழைபொழியும் என்ற நம்பிக்கையில் நாம் காத்திருப்போம் என்று கூறி தன்னம்பிக்கையுடன் எனது கூட்டிற்கு பறந்து சென்றேன்.

# அபிவிருத்தியின் போது கவனிக்க வேண்டிய சூழல் பிரச்சினைகள்

புவிச்சூழலின் பாதுகாப்பே மனித குலத்தின் நிலைப் பேறாகும். சூழல் பிரச்சினை ஒரு பிரதேசம், ஒரு நாடு சார்ந்ததல்ல. தேசிய எல்லைகளுக்கு அப்பாலும் பரவும் பிரச்சினையாகும். அபிவிருத்தி அடைந்த நாடுகளும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் தேசிய மட்டத்திலும் உலகளாவிய ரீதியில் சூழலைப் பாதுகாத்தல் மிக அவசிய தேவையாக மாறிவ-ிட்டது. ஆயினும் அவற்றினுடைய இன்றைய அபிவிருத்தி மட்டங்களில் காணப்படும் வேறுபாடுகளுக்கேற்பவே அவற்றின் பாதுகாப்பு முறைகளும் வழிவகைகளும் காணப்படுகின்றன.1994 ஆம் வருடம் ஜுன் மாதம் 24 ம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை பிரித்தானியாவில் மான்செஸ்டர் நகரத்தில் நகரங்களும் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியும்: என்னும் தலைப்பில் சர்வதேச நாடுகளின் பங்களிப்புடன் மாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் உலகின் பிரதான 63 நகரங்களில் இருந்து நூற்றிற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றினர். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் மகாநாடு அரசாங்கம், தொழில் வழங்குவோர், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள் என்பவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருந்ததாகும். இம்மகாநாடு ஐக்கிய நாடுகள் சபையினது சூழலும் அபிவிருத்தியும் பற்றிய மூன்றாவது மாநாடாகும். ஏற்கனவே 1972 ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டில் அதன் தலைநகரமான ஸ்டோக்கோமில் முதலாவது மாநாடு நடைபெற்றது. இரண்டாவது மகாநாடு பிரேசிலின் தலைநகரான ரியோடிஜெனீராவில் 1992 ஆம் ஆண்டு நடைபெற்றது.அபிவிருத்தியடைந்த நாடுகள் பொருளாதார ரீதியில் நன்கு அபிவிருத்திடைந்துள்ளன. ஆனால் சூழல் மட்டத்தில் அவை உச்ச அளவிற்குப் பூகோளத்தை மாசடைய வைத்துள்ளன. அபிவிருத்தியடைந்து வரும்

திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.சூழலும் அபிவிருத்தியும் என்ற கருத்து அபிவிருத்தித் திட்டமிடலில் இன்று கூடிய கவனிப்பை பெற்றுள்ளது. குறிப்பாக ஐந்து சூழற்பிரச்சினைகள் இன்று முதன்மையாக அடையாளம்




காணப்பட்டுள்ளன.

1. பூமி வெப்பமடைந்து வருதல்.
2. ஓசோன் படையில் துவாரம்.
3. நச்சுக்கழிவுகளை சூழலில் வீசுதல்.
4. உயிரினங்களின் பல்லுயிர்த் தன்மை அழிதல்.
5. நிலவளமும் நீர் வளமும் அழிதல்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உலக சனத்தொகையில் 1/3 பங்கினர் உள்ளனர். ஆனால் உலக வளங்களில் 2/3 பங்கினை அவை அனுபவித்து

கொரியா கருதுகிறார்.

1.வறுமையும் அதன் பாதகமான விளைவுகளையும் நீக்குவதற்கேற்ற விருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.இந்த விருத்தி நடவடிக்கைளில் சூழல் பாதிப்படையாததும் தாக்குப் பிடிக்கக் கூடியதாகவும் அமைவதை உறுதி செய்தல்.


நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் இன்னோர் கருத்தும் வற்புறுத்தப்படுகின்றது. என்னவெனில் எதிர்காலத் தேவைகளை விட்டுக் கொடக்காத வண்ணம் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வது ஆகும். அத்தோடு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தேவைகளை அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தேவைகளுக்காக விட்டுக்கொடுத்தலாகாது என்பதும் அடங்கும்.அத்துடன் பேண்தகு அபிவிருத்தியில் மேலும் இரு அம்சங்கள் கையாளப்படவேண்டும் என வற்புறுத்தப்படு கின்றது. அவை,

1.அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அபிவிருத்திக்கு திட்டமிடும்போது, அபிவிருத்தியடைந்த நாடுகளின் [illegible] விருத்தி மாதிரிகளை பின்பற்றக்கூடாது. அவை சூழலை மாசடைய வைத்தவை என்பதாலாகும். தத்தமது ஆள்புலச்சூழலையும் உலகளாவிய சூழல் பாதுகாப்பையும் கவனத்திற் கொண்டு திட்டங்களை வகுக்கவேண்டும்.

2.ஏற்கனவே அபிவிருத்தி அடைந்த நாடுகள் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை கருத்திற் கொண்டு ஏற்கனவே உருவாக்கப்பட்ட அபிவிருத்தி சார் கட்டமைப்புக்களைத் திருத்தியமைத்துக் கொள்ளவேண்டும்.

நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை அடைவதில்

**அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முதலீடு செய்யும்போது சூழல்பாதிக்கப்படாத முறையில் அமையும் தொழில் நுட்பம் கையாழப்பட வேண்டும். ஊதாரணமாக ஒவ்வொரு தொழிற்சாலைகளும் தமது கழிவு நீரைச் சுத்திகரிக்கும் உப ஆலையை நிறுவ வேண்டும். இத்தகைய தொழில் நுட்பங்களும் தேவையான இயந்திரங்களும் முன்னரை விட செலவு கூடியவையாகும்.**



நாடுகள் கைத்தொழில் நாடுகளைப் பின்பற்றி பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு சூழலை மாசடைய வைக்கும் பணியினை மெல்ல மெல்ல மேற்கொண்டு வருகின்றன. ஆனால் புறூண்லண்ட் ஆணைக்குழுவும், புவியுச்சி மாநாடும் ஏற்படுத்திய எச்சரிக்கை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை நின்று நிதானிக்க வைத்துள்ளன.நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் சூழலும் அபிவிருத்தியும் ஒரு நாணயத்தின் இருபங்குகள் போன்றவை. எனவே சூழலும் அபிவிருத்தியும் ஒன்றிற்கொன்று பாதிப்பில்லாமல் ஒருங்கே இணைந்து செயற்படல் நிலைத்துநிற்கும் அபிவிருத்தியின் குறிக்கோளாகும். நிலைத்து நிற்கும் அபிவிருத்தி திட்டங்களில் சூழல் மதிப்பீடு இல்லாத திட்டங்கள் கைவிடப்படும். சூழல் பாதுகாப்பு பாதுகாப்பு அபிவிருத்தியுடன் ஒன்றிணைந்தாலே அந்த அபிவிருத்தித்

வருகின்றன. அதே வேளை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் உலக சனத்தொகையில் 2/3 பங்கினைக் கொண்டிருந்தாலும் உலக வளங்களில் 1/3 பங்கினையே பயன்படுத்தி வருகின்றன. எனவே அதிக இயற்கை வளங்களை நுகரும் அபிவிருத்தி அடைந்த நாடுகளே உலகச் சூழலை அதிகளவில் மாசடைய வைத்தவையாகும். எனவே சூழற் பிரச்சினைகளை திருத்துவதற்கான பெரும் பங்கும் அந்த நாடுகளையுடையதாகும். என மூன்றாம் மண்டல நாடுகள் வற்புறுத்தி வருகின்றன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சூழற்பிரச்சினைகளுக்கு வறுமை முக்கிய் காரணியாகவுள்ளது. எனவே அந்த நாடுகளின் நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கான திட்டமிடல் பின்வரும் இருவழிகளில் செயல்பட வேண்டுமென கலாநிதி. காமினி

வளர்முக நாடுகள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

1.அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முதலீடு செய்யும்போது சூழல்பாதிக்கப்படாத முறையில் அமையும் தொழில் நுட்பம் கையாழப்பட வேண்டும். ஊதாரணமாக ஒவ்வொரு தொழிற்சாலைகளும் தமது கழிவு நீரைச் சுத்திகரிக்கும் உப ஆலையை நிறுவ வேண்டும். இத்தகைய தொழில் நுட்பங்களும் தேவையான யந்திரங்களும் முன்னரை விட செலவு கூடியவையாகும்.

2.நிலம், கனியவளம் என்பவற்றை உபயோகிக்கும் போது சூழலியற் கட்டுப்பாடுகளைக் கவனத்திற் கொண்டு விருத்திக்கான மாற்று வழிகளை கைக் கொள்ள வேண்டும். ஆதற்கும் செலவு அதிகமாகும்.



3.அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் முதனிலைப் பொருட்களில்தான் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பல தொழில்கள் இயங்ககின்றன. இது வளங்களின் எதிர்முகமான பாய்ச்சலாகும்.

4.அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வருடா வருடம் தாம் பெற்ற கடன்களுக்காக வட்டியாக 30m மில்லியன் டொலர்களை செலுத்துவதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நிலைத்துநிற்கும் அபிவிருத்தியின் செயற்பாடுகளுக்கு மேலதிகமாகும்.

5.வெளிநாட்டுப் பொருட்களின் விலை வீழ்ச்சி, உள்ளூர்க் கைத்ொழில் சந்தைகளைப் பாதுகாத்தல், வெளிச் சந்தைவாய்ப்புக்களைத் தேடுதல் போன்ற பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளுமுள்ளன.

இத்தகைய நிலைமைகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி பற்றிய ஆதரவுத்தளத்திற்க தடைக்கற்களாக அமைகின்றது.

வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை அவை அபிவிருத்தியின் ஆரம்பக் கட்டத்தில் உள்ளவை. சுதந்திரத்திற்குப் பின்னர் அபிவிருத்தி என்ற சுயசிந்தனை வளரப்பட்டு விட்டாலும் இந்த நாடுகள் வரவேற்கத்தக்க முன்னேற்றத்தை அடையவில்லை. வளர்முக நாடுகளில் அதிகரித்துவரும் சனத்தொகைக்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் பல் பொருளாதார சமூகப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இந்த நாடுகளைப் பொறுத்த வரையில் அவை அடிப்படைத் தேவைகளையே பூர்த்தி செய்ய முடியாது தவிக்கின்றன. இவ்வாறான நிலையில் இன்னும் பிறந்திராத மனிதர்களைப் பற்றி சிந்திப்பது அர்த்தமற்றது. வளங்களைப் பூரணமாக கண்டு பிடிக்கவே தொழில்நுட்ப வசதியின்றி துயருறும் இந்நாடகளுக்கு மீளு சுற்று அடிப்படையில் வளங்களைப் பேணல் போன்ற ஆலோசனைகளை வளர்ந்த நாடுகள் வழங்குவது சாத்தியமற்ற ஒரு விடயமாகும்.

இந்நாடுகளில் நிலவும் வறுமை, போசாக்கின்மை, சுகாதார மருத்துவ வசதிகள் குறைவு, கல்வியறிவின்மை, மூளைசாலிகள் வெளியேற்றம், தொழில்நுட்ப வசதிக்குறைவு, சனத்தொகைப் பெருக்கம் போன்றவற்றின் காரணமாக நிரந்தர அபிவிருத்தியை ஏற்படுத்த தடைகளாகவுள்ளன. வறுமையால் பீடிக்கப்பட்டுள்ள மக்கள் தொகை அதிகரித்து வருவதால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகின்றன. 2000 ஆம் ஆண்டு உலக அபிவிருத்தி குறிகாட்டிகளை அளவுகோலாகக் கொண்டு பார்க்கும்போது உலக மக்களில் 16சதவீதத்தைக் கொண்டுள்ள வடஅமெரிக்கா, ஐரொப்பிய நாடுகள், யப்பான் என்பன உலக மொத்த வருமானத்தில் 80 சதவீதத்தைக் கொண்டிருக்கின்றன. 1998 இல் மாத்திரம் அந்நாடுகளில் சராசரிப்பிரஜை ஒருவர் நாளாந்தம் 70 அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்றிருந்தனர். அதேவேளை உலகில் 57 சதவீதமான மக்களைக கொண்டிருந்த 63 நாடகள் உலக வருமானத்தில் 6 சதவீதத்தைக் கொண்டிருந்தன.

வறுமை நாட்டின் வளத்தைப் பாதிப்பதுடன் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை ஏற்று அமுல் செய்ய வளர்ச்சி குறைந்த நாடுகளைத் தூண்டுகின்றது. இதற்குக் காரணம் ஏழை மக்களுக்கு நன்மை பயக்கும் குறகிய நன்மைகளை அரசாங்கம் நாடுவதே ஆகும். வறுமையில் வாழும் சுகாதாரக் குறைவான சூழலில் வசிக்கம் மக்கள் பூமியின் பௌதீக சூழலில் பெரும் பாதிப்பை உண்டு பண்ணுகிறார்கள். காடழிப்பு, சேனைப் பயிாசெய்கை, சேரிப்புறக் குடியிருப்புக்கள் முதலியன சூழலைப் பாதிக்கின்றன.


இந்நாடுகளில் உற்பத்தியைப் பெருக்கவதற்க நவின தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்த போதியளவு மூலதனங்கள் இல்லை. வேறு நாடுகளிலிருந்து பயிற்சி பெற்றவர்களை வரவழைக்க முடியாத நிலை அத்துடன் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும்போது அந்த தொழில் ஈடுபட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு இன்மை ஏற்படுகின்றது. ஏணைய நாடுகளிலிருந்து பயிற்சியாளர்களை வரவ-ளைக்கும் போது அவர்கள் இந்நாடுகளின் தராதரத்தை அறிந்து உரிய முறைகளில் பயிற்சிகளை வழங்காது விடுதல். இவ்வாறான காரணங்களினால் இந்நாடகளில் நிலைத்திருக்கும் அபிவிருத்தி பற்றிய எண்ணம் தூர நோக்குடையதாகக் காணப்படுகின்றது.

அதிகரிக்கும் சனத்தொகையும் இந்நாடுகளில் எதிர்நோக்கும் சவால்களாக உள்ளன. மருத்துவத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி, உணவில் போசாக்கு போன்றவற்றிழன் காரணமாக சனத்தொகையில் அதிகரிப்பு கூடுதலா கவுள்ளது. சனத்தொகைக்கு ஏற்ப விவசாயத்தில் கிருமிநாசினிகளின் பயன்பாடு அதிகரித்தது. இவற்றினால் பல்வேறுபட்ட பிரச்சினைகளை சூழல் எதிர்கொண்டு வருகின்றது. இவை இந்நாடுகளில் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு தடையாக உள்ளன.

வளர்ந்த நாடுகள் உலக சனத்தொகையில் ஏறத்தாள 20 வீதத்தை கொண்டு காணப்பட உலக வளங்களில் 80 வீதமானவற்றை இந்நாடுகளே நுகர்கின்றன.

வளர்முக நாடுகளில் இந்நிலை வித்தியாசமாகக் காணப்படுகின்றது. அதாவது 80 சதவீதமான மக்களைக் கொண்டு காணப் படும் இந்நாடுகளில் 20 வீத வளநுகர்வே காணப்படுகின்றது. வளர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி முயற்சிகள் யாவும் வளர்முக நாடுகளின் முன்னேற்றத்தில் காணப்படும் படுகுழிகளாகவெ உள்ளன. எனவே நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை சிந்திக்கக் கூடிய அளவிற்கு வளர்முக நாடுகள் இல்லை என்றே கூறலாம்.

ச.மகேந்திரன்



# புத்தரின் புனித சின்னங்கள் இலங்கை வந்து சேர்ந்தன!



இந்தியாவின் கபிலவஸ்துவிலிருந்த புத்தர் பெருமானின் புனித சின்னங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்ற வைபவமென்றின்போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்புனிதச் சின்னங்களை பொறுப்பேற்றார்.

இந்திய விமானப்படையின் விசேட விமானமொன்றின் மூலம் இச்சின்னங்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்திய கலாசார அமைச்சர் குமாரி சேல்ஜா இவற்றை கொண்டு வந்தார். 1978 ஆம் ஆண்டிற்குப் பின் இவை இலங்கைக்கு கொண்டுவரப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இப்புனிதச் சின்னங்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் இந்தியாவில் கௌத்தம புத்தரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய பல இடங்களில் உள்ள பௌத்த பிக்குகள் டில்லி விமானப்படைத் தளத்தில் விசேட பூஜைகளை நடத்தினர். இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் மற்றும் இலங்கை உயர்தானிகராலய அதிகாரிகள் பலர் இப்பூஜைகளில் கலந்துகொண்டனர்.

பண்டாரநாயக்க விமான நிலையத்தில் இப்புனிதச் சின்னங்கள் கொண்டுவரப்பட்டவுடன் மகாநாயக்க தேரர்கள் உட்பட நூற்றுக் கணக்கான பௌத்த பிக்குகள் பிரித் ஓதினர்.

இப்புனிதச் சின்னங்களை கொண்டு வந்தமைக்காக நன்றி கூறுகிறேன் என இந்திய கலாசார அமைச்சர் சேல்ஜாவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். விமான நிலையத்திலிருந்து களனி மானல்வத்த விகாரைக்கு இச்சின்னங்கள் கொண்டுசெல்லப்பட்டன. செப்டெம்பர் 4 ஆம் திகதிவரை அவை அங்கு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

கபிலவஸ்து புனிதச் சின்னங்கள் என அழைக்கப்படும் இச்சின்னங்கள் பீஹார் மாநிலத்திலுள்ள புராதன கபிலவஸ்து நகரம் என கருதப்படும் பகுதியில் 1898 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவுக்கு வெளியே 1978 ஆம் ஆண்டு இச்சின்னங்கள் முதல் தடவையாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. 1993 இல் மொங்கோலியாவிலும் 1994 ஜூலையில் சிங்கப்பூரிலும் 1995 இல் தென்கொரியாவிலும் 1996 இல் தாய்லாந்திலும் இவை பொதுமக்களின் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இப்புனிதச் சின்னங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த இந்திய அதிகாரிகள் அவற்றை இந்திய தேசிய நூதனசாலையில் வைத்திருப்பதற்கும் இந்தியாவுக்கு வெளியே அவற்றை அனுப்புவதில்லை எனவும் தீர்மானித்தனர்.

எனினும் இப்புனிதச்சின்னங்களை வழிபடுவதற்கு இலங்கை மக்களுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக அவற்றை இலங்கைக்கு அனுப்புமாறு இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு வேண்டுகோள் விடுத்திருந்தார். இதற்கிணங்க ஒரு விதிவிலக்காக அவற்றை இலங்கைக்கு அனுப்ப இந்திய அரசாங்கம் தீர்மானித்தது.

## வேலூர் சிறையிலிருந்து தப்பிய புலிகளை இலங்கைக்கு அனுப்பியவன் நான்

### வைகோ தெரிவிப்பு

வேலூர் சிறையிலிருந்து, அகழி வழியாக தப்பிய இலங்கைத் தமிழ் இளைஞர்கள், 45 பேரில், மூவரை புதுக்கோட்டையிலிருந்து, கடல் வழியாக இலங்கைக்கு நான் தான் அனுப்பி வைத்தேன் என வைகோ தெரிவித்துள்ளார்.

1995ஆம் ஆண்டு இந்திய சுதந்திர தினத்தன்று, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த புலிகள், 43 பேர், அகழி வெட்டி, அதன் மூலமாக சிறையில் இருந்து தப்பிய சம்பவம் நடந்தது.

நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவத்தில், தப்பியோடிய புலிகளில், 21 பேர் மட்டுமே, அடுத்த சில நாட்களில் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஏனையவர்கள் பொலிஸில் பிடிபடவில்லை.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் புதுக்கோட்டையில் வைகோ உரையாற்றுகையில்,

வேலூர் சிறையிலிருந்து, அகழி வழியாக தப்பிய இலங்கைத் தமிழ் இளைஞர்கள், 45 பேரில், மூவரை புதுக்கோட்டையிலிருந்து, கடல் வழியாக இலங்கைக்கு நான் தான் அனுப்பி வைத்தேன் என தெரிவித்தார்.

சிறையில் இருந்து தப்பிய புலிகளை, இலங்கைக்கு தான் அனுப்பி வைத்ததாக வைகோ ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறையில் இருந்து தப்பிய கைதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதே குற்றம் எனும் நிலையில், அவர்களை வேறு நாட்டுக்கு தப்பிச் செல்ல உதவியதும், அதை வெளிப்படையாக, வைகோ பெருமிதமாகத் தெரிவித்திருப்பதும், அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## வவுனியாவில் வடமாகாண சுதேச வைத்தியர்களின் செயலமர்வு

(கிளிநொச்சி)

வடமாகாணம் தழுவிய ரீதியில் ஐந்து மாவட்டங்களில் உள்ள பாரம்பரிய சுதேச வைத்தியர்கள் பங்குபெறும் செயலமர்வு ஒன்று எதிர்வரும் 22, 23 திகதிகளில் வவுனியா பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

ஆயுர்வேத திணைக்களத்தின் தேசிய மருத்துவ பிரிவால் முன்வைக்கப்பட்டுள்ள இச்செயலர்வில் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள அனுசரணையுடனும் வடமாகாண ஆயுர்வேத பாதுகாப்புச் சபைகளின் இணைய ஒத்துழைப்புடனும் நாற்பது சுதேச பாரம்பரிய மருத்துவர்கள் பங்குபெறவுள்ளனர்.

சோதிடமும் மணிமந்திரமும் என்னும் பொருளில் இச்செயலமர்வு இடம்பெறவுள்ளது. இவ்வாறான செயலமர்வு ஒன்று அண்மையில் மன்னாரில் ஆயுர்வேத திணைக்கள தேசிய பாரம்பரிய முறைமைகள் பிரிவால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நீர்கொழும்பில் இரு ரஷ்ய பிரஜைகள் மரணம்

நீர்கொழும்பு, ஏத்துக்கால கடலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை குளிப்பதற்காகச் சென்ற இரு ரஷ்யப் பிரஜைகள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஏத்துக்கால உல்லாசப் பயணத்துறை பொலிஸார் தெரிவித்தனர். ரஷ்யப் பிரஜைகளான 54 வயதுடைய ஆண் ஒருவரும் 28 வயதுடைய பெண் ஒருவருமே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வேலணை துறையூரில் மீன் சந்தை

வேலணை பிரதேச சபையின் கீழுள்ள வேலணைத் துறையூரில் மீன்சந்தை ஒன்று அமைக்கப்படவுள்ளது. உலக வங்கியின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான புறநெகும உள்ளூர் பிரதேச கிராமிய சிறுநகர அபிவிருத்தி கடன் திட்டத்தின் மூலம் 87 இலட்சம் ரூபா செலவில் இம்மீன் சந்தை அமைக்கப்படவுள்ளது.

## நான்கு நாட்களில் இரண்டு பெண்கள் வீதம் இலங்கையில் புற்றுநோய்க்கு பெண்கள் பலி

தொண்டை மற்றும் மார்பகப் புற்று நோய் காரணமாக நான்கு நாட்களுக்கு இரண்டு பெண்கள் வீதம் இலங்கையில் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வருடம் ஒன்றிற்கு 1,200 பெண்கள் தொண்டைப் புற்று நோயினாலும் 2,400 பெண்கள் மார்பகப் புற்று நோயினாலும் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புற்றுநோய் இனங்காணப்பட்டபோதும் திருமணமான 90 சதவீதமான பெண்கள் ஆரம்பகட்ட நோய்தாக்கத்தின் போது சிகிச்சைக்கு முகங்கொடுப்பதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நாரஹென்பிட்டி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள புற்றுநோய் பரிசோதனை மத்திய நிலையத்தில் "மமோகிராம்" மற்றும் "பப்" பரிசோதனைகளை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்தமாத முதல் வாரத்திலிருந்து மார்பகப் புற்றுநோயை கண்டறிவதற்கான "ஸ்கான்" பரிசோதனையை இங்கு இலவசமாக செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல் நாட்டின் பல பாகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "சுவஉதாண" செயற்திட்டத்தின் மூலமா[illegible] தொண்டை மற்றும் மார்பகப் புற்று நோய்களை கண்டறியும் பரிசோதனைகளை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சகல திருமணமான பெண்களும் இரண்டு வருடத்திற்கு ஒருதடவை புற்றுநோயை கண்டறியும் பரிசோதனைகளை செய்ய வேண்டும் என அமைச்சு மேலும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.



செல்வி மயூரிகா பத்மநாதனின் நடன அரங்கேற்ற நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அவரது ஒரு நடன அசைவைப் படம் காட்டுகிறது.

## தென்னாபிரிக்க சுரங்கத் தொழிலாளர் மீது துப்பாக்கிச் சூடு, 36 பேர் பலி

சம்பள உயர்வு கேட்டு போராட்டம் நடத்திய சுரங்க தொழிலாளர்கள் மீது பொலிசார் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 36 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். தென்னாபிரிக்காவின் ரஸ்டன்பர்க் அருகே உள்ளது மரிகானா. இங்கு விலை உயர்ந்த பிளாட்டினச் சுரங்கம் உள்ளது. உலகிலேயே இந்தச் சுரங்கம் மிகப் பெரியது. இது லண்டனை சேர்ந்த லோன்மின் நிறுவனத்துக்குச் சொந்தமானது. சுரங்கத்தில் 4 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் வேலை செய்கின்றனர்.

கடினமான வேலை இருந்தும் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.4000தான். அத்துடன் சுரங்கத்தில் விபத்தில் பாதிக்கப்படும் தொழிலாளருக்கு சரியான இழப்பீடும் கிடைப்பதில்லை. இந்நிலையில் மூன்று மடங்கு சம்பள உயர்வு கேட்டு கடந்த 10ஆம் திகதி முதல் தொழிலாளர்கள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களை வேலைக்கு திரும்பும்படி தொழிற்சங்கத்தினர் கூறினர். அப்போதுதான் நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று கூறினர். இதை தொழிலாளர்கள் ஏற்கவில்லை. கடந்த புதன்கிழமை போராட்டம் முற்றியது. பயங்கர ஆயுதங்களுடன் சுரங்கப் பகுதியில் 3,000 இற்கும் அதிகமான தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்களை கலைக்க பொலிசார் கண்ணீர் புகை குண்டு வீசினர். தடியடி நடத்தினர். எனினும் தொழிலாளர்கள் போராட்டத்தில் உறுதியாக இருந்தனர். இதையடுத்து பொலிசார் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 36 தொழிலாளர்கள் பரிதாபமாக இறந்தனர்.

இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. தொழிலாளர் கும்பலைக் கலைக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டோம்.

எனினும் பொலிசார் மீது அவர்கள் தாக்குதல் நடத்தியதால் துப்பாக்கிச் சூடு நடத்தினோம் என்று அதிகாரிகள் கூறினர்.

## மோ.சைக்கிளில் பயணித்த 5 பெண்களுக்கு அபராதம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பின் ஆசனத்தில் ஒருபக்கமாக அமர்ந்து சென்ற ஐந்து பெண்களுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் தலா 100 ரூபா தண்டம் விதித்துள்ளார்.

வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநருடன் பின்பக்கமாக ஆசனத்தில் அமர்ந்து ஒருபக்கம் காலை வைத்துப் பயணித்த பெண்கள் வல்வெட்டித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் குற்றவாளிகளுக்கு தலா 100 ரூபா தண்டமாக விதித்து, எச்சரித்து விடுவித்தார்.

## வைரஸ் தாக்கிய பென்டிரைவில் கோப்புகளை மீட்டெடுப்பதற்கு



தற்பொழுது தகவல்களை சேமிக்க பெருமாலானவர்களால் பயன்படுத்தப்படுவது USB பென்டிரைவ்கள். இதில் முக்கியமான பிரச்சினை வைரஸ் பிரச்சினை. வெவ்வேறான கணணிகளில் உபயோகிப்பதால் வைரஸ்கள் சுலபமாக பென்டிரைவில் புகுந்து உள்ளே இருக்கும் கோப்புகளை பாதிக்கிறது.

இப்படி பாதிக்கும் பொழுது உங்கள் பென்ட்ரைவில் உள்ள பைல்கள் மறைக்கப்பட்டுவிடும். கணணியில் பென்டிரைவை இட்டு திறந்து பார்த்தால், எந்த கோப்புகளும் இருக்காது. ஆனால் properties சென்று பார்த்தல் கோப்புகள் இருப்பது போன்றே அளவு காட்டும். காரணம் நம் தகவல்களை வைரஸ்கள் மறைத்து வைத்துவிட்டது.


பென்டிரைவில் முக்கியமான தவல்கள் ஏதும் இல்லை எனில் Format செய்து கொள்ளலாம். ஆனால் ஏதேனும் முக்கியமான தகவல்கள் இருந்தால் எப்படி அந்த கோப்புகளை பத்திரமாக மீண்டும் கொண்டு வருவதற்கு ஒரு வழி உள்ளது.

இதற்கு நீங்கள் எந்த மென்பொருளையும் உங்கள் கணணியில் இன்ஸ்டால் செய்து உபயோகிக்க வேண்டியதில்லை. உங்கள் கணணியிலேயே சுலபமாக செய்து விடலாம். கீழே உள்ள வழிமுறையின்படி கவனமாக செய்து அந்த கோப்புகளை மீட்டு எடுக்கலாம்.

1. முதலில் பென்டிரைவை உங்கள் கணணியில் சொருகிக் கொள்ளுங்கள்.
2. Start ==> Run ==> CMD ==> Enter கொடுக்கவும்.
3. இப்பொழுது பென்ட்ரைவ் எந்த ட்ரைவில் உள்ளது என பாருங்கள். (My Computer செல்வதன் மூலம் கண்டறியலாம்.)
4. உதாரணமாக E: டிரைவில் பென்ட்ரைவ் இருக்கிறது என வைத்து கொள்வோம். அதற்கு நீங்கள் E: என கொடுத்து Enter அழுத்தவும்.
5. attrib -s -h /s /d *.* என டைப் செய்யுங்கள் ஒவ்வொரு பகுதிக்கும் Space சரியாக கொடுக்கவும். நீங்கள் சரியாக கொடுத்து உள்ளீர்கள் என உறுதி செய்து கொண்டு Enter அழுத்துங்கள்.

சில வினாடிகள் பொறுத்திருங்கள். இப்பொழுது உங்கள் பென்ட்ரைவ் சோதித்து பாருங்கள். உங்களுடைய கோப்புகள் அனைத்தும் திரும்பவும் வந்திருக்கும்.

## வீடு கட்ட பிளான் உருவாக்கி கொடுக்கும் பயனுள்ள இணையதளம்



புதிதாக வீடு கட்ட விரும்புபவர்கள் தங்களுக்கென்று தோன்றும் எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்து வீடுகட்ட பிளான் உருவாக்கி கொடுக்கிறது ஒரு தளம்.

இணையதள முகவரி: http://www.smallblueprinter.com/sbp.html

இத்தளத்திற்கு சென்று நாம் Design > Isometric View > 3D Walkthrough மற்றும் Print என்ற மெனுக்களில் முதலில் Design மெனு திறக்கும் இதில் Blank Plan my;yJ Sample Plan என்பதில் ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் அடுத்து வலது பக்கம் இருக்கும் Wall கருவி யைப் பயன்படுத்தி எங்கு சுவர் வேண்டுமோ அங்கு கொண்டு வரலாம், அதே போல் எங்கு கதவு வேண்டும் , எங்கு சன்னல் வைக்க வேண்டும் என அனைத்தையுமே நாம் இதைச் சொடுக்கி எளிதாக வைத்துக் கொள்ளலாம். Transform என்ற டூலை பயன்படுத்தி எங்கு வேண்டுமானாலும் நகர்த்தலாம் வடிவத்தை மாற்றி அமைக்கலாம்.


இதே போல் Isometric View மற்றும் 3D Walkthrough போன்றவற்றில் நமக்கு பிடித்த வண்ணத்தை தேர்ந்தெடுக்கலாம் எல்லாம் தேர்ந்தெடுத்த பின் Print என்ற பொத்தானை சொடுக்கி அச்சுப் பதிவு செய்யலாம்.






ஓடியோ பைல்களை ஒரு பைல் பார்மெட்டிலி ருந்து மற்றொரு பைல் பார்மெட்டாக கன்வெர்ட் செய்ய வேண்டு மெனில் நாம் எதாவது ஒரு மென்பொருளின் உதவியை மட்டுமே நாடி செல்ல வேண்டும். ஆடியோ பைல் களை கன்வெர்ட் செய்ய இணையத்தில் அதிகமான மென்பொருள்கள் கிடைக்கிறன. மென்பொருள்க ளின் உதவி இல்லாமல் ஓடியோ பைல்களை கன்வெர்ட் செய்ய ஒரு தளம் உதவி செய்கிறது. நாம் சாதாரணமாக பாடல்களை கன்வெர்ட் செய்ய வேண்டுமெனில் கணினியில் மென்பொருளை நிறுவி அந்த மென்பொருளின் வாயிலாக கன்வெர்ட் செய்வோம். சில நேரங்களில் நமக்கு குறிப்பிட்ட மென்பொருளானது கிடைக்கபெறாது. அதுபோன்ற சூழ்நிலைகளில் பாடல்களை கன்வெர்ட் செய்வது என்றால் அதற்கு ஒரே வழி ஆன்லைன் மட்டுமே ஆகும். அந்த வகையில் பாடல்களை கன்வெர்ட் செய்ய ஒருதளம் உதவி செய்கிறது.

## ஓடியோ பைல்களை கன்வெர்ட் செய்ய ஒரு தளம்



தளத்திற்கான சுட்டி: http://switchr.net/

சுட்டியில் குறிப்பிட்ட தளத்திற்கு சென்று, உங்களுடைய பாடல் கோப்பினை தேர்வு செய்யவும். பின் எந்த பார்மெட்டாக கன்வெர்ட் செய்ய வேண்டும் என்பதை தேர்வு செய்யவும். அடுத்ததாக மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும். கடைசியாக Switch my file என்னும் பொத்தானை அழுத்தவும். சில நொடிகளில் உங்களுடைய பாடலானது கன்வெர்ட் செய்யப்பட்டு உங்களுடைய மின்னஞ்சல் முகவரிக்கு தரவிறக்கம் செய்வதற்கான சுட்டி அனுப்பி வைக்கப்படும்.

## facebook பேஸ்புக் நண்பர்களின் ஸ்கைப் skype முகவரியை கண்டறிவதற்கு

பேஸ்புக் நண்பர் எவருடனாவது முகம் பார்த்து பேச விரும்பினால் இலகுவாக தொடர்பு கொள்ள ஸ்கைப்பை தான் அனைவரும் விரும்புவோம். ஆனால் பேஸ்புக்கில் இருக்கிற அனைவரும் தங்கள் ஸ்கைப் முகவரியை பேஸ்புக் சுயவிபர குறிப்பில் காட்சிப்படுத்தியிருக்க மாட்டார்கள். ஆகவே அதை எவ்வாறு பெறுவது? இதற்கு ஸ்கைப் பிலே வசதி உள் ளது. நீங்கள் செய்ய வேண்டியது ஸ்கைபிலே சென்று contacts ->import contacts ஐ சொடுக்குங்கள். அதன் பின்னர் ஒரு விண்டோ தோன்றும். அதில் உங்கள் பேஸ்புக்கின் பயனர் பெயரையும், கடவுச் சொல்லையும் கொடுத்து import என்பதை அழுத்துங் கள். சற்று நேரத்திலே உங்கள் பேஸ்புக் தொடர்பில் உள்ளவர்களது மின்னஞ்சல் முகவரி களுடன் ஸ்கைப் முகவரியையும் வெளிக்காட்டும்.

## YouTube யூடியூப் வீடியோக்களை தேவையான போர்மட்டில் தரவிறக்க.

**யூடியூப்** இணையதளத்தில் இல் லாத திரைப்படங்களே இல்லை என்று சொல்லுமவுக்கு ஏகப்பட்ட படங்கள் உள்ளன.

திரைப்படங்கள் அதிகாரபூர்வமாக வெளிவருகிறதோ இல்லையோ இதில் முன்கூட்டியே வெளியிடப்படும். இதில் படங் களைப் பார்ப்பவர்கள் பிடித்திருந்தால் தரவிறக்க வேண்டும் என நினைப்பார்கள். சிலர் மென் பொருள்களின் மூலமும், சில இணையதளங்களின் மூலமாகவும் படங்களைத் தரவிறக்கம் செய்வார்கள். இதில் படங்கள் FLV என்ற வடிவத்தில் இருக்கும். இதனால் படங்களைத் தரவிறக்கி மறுபடியும் நமக்குப் பிடித்த வடிவத்திற்கு மாற்றுவோம்.

வேறு எந்த மென்பொருளின் துணையின்றியும் வேறு இணையதளத்திற்குச் செல்லாமலும் பயர்பொக்ஸ் உலவியில் ஒரு நீட்சியைச் சேர்ப்பதன் மூலம் எளிதாக யூடியூப் படங்களைத் தரவி றக்க முடியும். இந்த நீட்சியின் பெயர் நுயளல லுழரவரடிந ஏனைநழ னுழறடெழயனநச. இதில் உள்ள சிறப்பு வசதி என்னவென்றால் பார்த்துக் கொண்டிருக்கிற படம் பிடித்திருந்தால் நேரடியாக படத்திற்கு கீழேயே தரவிறக்கம் செய்வதற்கான இணைப்பில் வேண்டிய வகையைத் தேர்வு செய்து தரவிறக்கலாம்.


Mp3, Mp4, FLV மற்றும் யூடியூபின் புதிய வசதியான High Definition வகையிலும் தரவிறக்க முடியும். சில படங்கள் HD யில் இல்லாமல் இருக்கும். அவற்றிற்கு கீழே HD என்ற வசதி மட்டும் இருக்காது.

பின்னர் பயர்பொக்ஸ் உலவியை ஒருமுறை மறுதொடக்கம் செய்து விட்டு யூடியூப் தளத்திற்குச் சென்று எதாவது ஒரு படத்தைக் கிளிக் செய்து பாருங்கள். வீடியோவிற்குக் கிழே Download as என்ற மெனு புதியதாக இருக்கும். அதில் வேண்டிய வடிவத்தைத் தேர்வு செய்தால் படம் உங்கள் கணணிக்கு எளிதாக தரவிறக்கப்படும்.

ஜெயித்துவிட்டோம் என்று மனிதர்கள் ஆனந்தமாகக் கூவினார்கள். தங்கள் எதிரிகள் முற்றிலும் தோற்று ஓடிவிட்டார்கள் என்று அவர்கள் கற்பனை செய்துகொண்டு உற்சாகப்பட்டார்கள். ஒன்றாகச் சேர்ந்து போகாமல், அங்கொருவரும் இங்கொருவருமாகக் கலைந்து ஓடி, விலங்குகளைத் துரத்தினார்கள் அவர்கள்.

இதற்குத்தான் காத்திருந்தது ஸ்நோபால் முற்றத்துக்குள் மனிதர்கள் வந்து அகப்பட்டுக்கொண்டதும் அங்கு காத்திருந்த மூன்று வண்டிக் குதிரைகளும், மூன்று பசுமாடுகளும் மற்றும் தயாராக ஒளிந்து கொண்டிருந்த பன்றிகளும் அவர்களுக்குப் பின்னால் வந்து தாக்கின. மனிதர்கள் முன்னும் போக முடியாமல் பின்னும் போக முடியாமல் மாட்டிக் கொண்டார்கள்.

மனிதர்களைத் தாக்குவதற்குக் குரல் கொடுத்த ஸ்நோபால் நேராக ஜோன்ஸைக் குறி வைத்துத் தாக்கியது. அதைக் கண்ட ஜோன்ஸ் அதைத் துப்பாக்கியால் சுட்டான்.




சிறு குண்டுகள் ஸ்நோபாலின் முதுகில் தைத்து இரத்தம் தெறித்தது. அருகிலிருந்த ஒரு ஆடு செத்தே விழுந்துவிட்டது.

ஒரு விநாடி கூடத் தயங்காமல் ஸ்நோபால் தாவித் தன்னுடைய இருநூற்றுப் பத்து பவுண்டு கனத்துடனும் ஜோன்ஸின் கால்களில் மோதியது. ஜோன்ஸ் தடுமாறி ஒரு குழியில் விழுந்தான். கையிலிருந்த துப்பாக்கி நழுவி எங்கோ போய் விழுந்தது.

ஆனால் இதில் மிகவும் பயங்கரமான யுத்த வீரனாகக் காட்சியளித்தது பாக்ஸர்தான். பின்னங் கால்க ளால் உயர எம்பி நின்று கொண்டு, முன்னங் கால்களால் எதிர்ப்பட்டவர்களை எல்லாம் அடித்து நொறுக்கிக்கொண்டிருந்த பாக்ஸரைப் பார்க்கவே பயங்கரமாகத்தான் இருந்தது.

பாக்ஸ்வுட் பண்ணையிலிருந்து வந்து ஒரு லயத்து வேலைக்காரனை முதல் அடியிலேயே உயிரற்றவன் போலச் சரிந்து விழச் செய்துவிட்டது பாக்ஸர். அதைப் பார்த்த மனிதர்கள் தடிகளைக் கீழே போட்டுவிட்டு வெளியே ஓடிவிட முயன்றார்கள். பயத்தால் புத்தி குழம்பிப் போனார்கள்.


அடுத்த விநாடி எல்லா விலங்குகளுமாகச் சேர்ந்து மனிதர்களை முற்றத்திலே சுற்றித் துரத்தின.

அடி, உதை, குத்து எல்லாமாகச் சேர்ந்து ரத்தம் ஏராளமாகச் சிந்தியது அங்கே.


கொம்புகளி னால் பல மனிதர்கள் காயமடைந்தார்கள். அவர்கள் மேல் அதன தன் இஷ்டப்படி வஞ்சம் தீர்த்துக் கொள்ளாத மிருகமே விலங்குப் பண்ணையில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

(நாளை...)

## வரைவோம் வாருங்கள்!



## ஆமையின் ஆயுள் அதிகம்!



ஆமை ஊர்வன இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு ஆகும். இவை நீரிலும் நிலத்திலும் வாழவல்லன.

நிலத்தில் வாழும் ஆமைக்கு கால்களில் நகங்கள் அமைந்திருக்கின்றன. ஆமை தரையில் நடக்கும் வேகம் மணிக்கு சுமார் 70 மீட்டர். கடலில் வாழும் ஆமை வகைகளின் கால்களே துடுப்பு போன்று அமைந்திருக்கும். கடல் ஆமை ஒரே சமயத்தில் 200 முட்டைகளிடும். இதன் உடல் ஓட்டினால் மூடப்பட்டதாக இருக்கும். உலகில் ஏறத்தாழ 300 வகையான ஆமையினங்கள் உள்ளன. இவற்றில் சில இனங்கள் அழிவை எதிர்கொள்கின்றன. இலங்கையில் ஆமையை வேட்டையாடுவதற்கு தடை உள்ளது. பொதுவாக உயிரினங்களில் ஆமைகளுக்கு நீண்ட ஆயுள் உள்ளது. அதன் இதயம் மிகவும் நிதானமாகத் துடிப்பதே அதன் நீண்ட ஆயுளுக்குக் காரணமாக அமைகிறது.இதுவரை பதிவு செய்யப்பட்டவற்றிலேயே மிகவும் முதிய ஆமை, அதிலும் மிகவும் முதிய விலங்கினம் என்பதானது, 1777ஆம் ஆண்டில் பிறந்து சில நாட்களில் டாங்காவின் அரச குடும்பத்துக்கு பிரித்தானிய ஆய்வாளர் காப்டன் குக் என்பவரால் பரிசளிக்கப்பட்ட டுயி மாலிலா என்னும் ஆமையாகும். 1965ஆம் ஆண்டு மே மாதம் 19 அன்று இயற்கையாக மரணம் அடையும் வரையிலும், டுயி மாலிலா டாங்காவின் அரச குடும்பத்தின் கவனிப்பில் இருந்து வந்தது. இறக்கும் பொழுது டுயி மாலிலாவின் வயது 188 ஆண்டுகளாகும்.

## செவ்வாயில் மனிதன்

ஆகஸ்ட் 6ல் செவ்வாயில் தரை இறங்கிய நாசாவின் "கியூரியாசிட்டி ரோவர்" தரையிறங்கியுள்ளது. இதற்கான செலவு கிட்டத்தட்ட 2.5 மிலியன் டாலர்கள். க்யூரியாசிட்டியி வேதியல் லேப், எக்ஸ்ரே ஸ்கேனர், லேசர் கருவிகள் இணைக்கப்பட்டுள்ளது இதன் மூலம் மண்சத்து மூலக்கூறுகளை மற்றும் அக்காலம் இக்காலம் குறித்த ஆய்வு பணி செய்யப் போகிறது. இந்த வெற்றி இன்று நேற்று செய்யப்பட்ட ஆய்வின் முயற்சி அல்ல கடந்த 50 ஆண்டுகாலப் போராட்டம்.

**செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பப்பட்ட விண்கலங்கள்**

1962 முதல் செவ்வாய் ஆய்வுகோள் ஸ்புட்னிக் 24, 1971 மார்ஸ் 2 ஆர்பிட்டர்

1975 வைகிங் 1 மற்றும் 2, 2003 மார்ஸ் எக்ஸ்பிரஸ், 2003 மார்ஸ் ரோவர் ஸ்பிரிட், 2011 க்யூரியாசிடி ரோவர்

**செவ்வாய் கிரகம் பற்றிய சில தகவல்கள்:**



செவ்வாய் இதர கிரகங்களுடன் ஒப்பிடும் போது இதில் குடியேறும் வாய்ப்பு அதிகம். பூமியை விட சிறியது. தன்னைத்தானே சுற்ற 24.6 மணி நேரம் எடுத்துக்கொள்கிறது. இதனுடைய ஒரு ஆண்டு என்பது 687 நாட்கள் அதாவது இது சூரியனை சுற்ற எடுத்துக்கொள்ளும் நாட்கள். இதன் வெப்பநிலை -25 டிகிரி சென்டிகிரேட். மெலிதான காற்று மண்டலம் உண்டு. செவ்வாய் ரோமானியர்களின் போர் கடவுள்.

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**


# சிறுவர் அமுதம்

### தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு



தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு ஒன்று
துள்ளிக் குதிக்குது
கன்றுக்குட்டி
அம்மா என்றது வெள்ளை பசு
உடன் அண்டையில் ஓடுது
கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளை பசு
பாலை நன்றாய் குடிக்குது
கன்றுக் குட்டி
முத்தம் கொடுக்குது
வெள்ளைப்பசு
மடி முட்டிக் கொடுக்குது
கன்றுக்குட்டி

### விடுகதைகள்




1.காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காகம் இருக்கக் கொப்பில்லை.

2.கத்தி போல் இலை இருக்கும். கவரிமான் பூ பூக்கும். தின்ன பழம் கொடுக்கும். தின்னாத காய் கொடுக்கும்.

3.கடலில் கலக்காத நீர், யாரும் குடிக்காத நீர் - அது என்ன?

4.அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைப்பான் - அவன் யார்?

5.ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் - அது என்ன?

1.நெல்லு 2.வேம்பு
3.கண்ணீர் 4.மேளம்
5.வாய்

சுடோக்கு எண் 32 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 5 | 3 | 6 | 8 | 2 | 4 | 7 |
| 6 | 3 | 2 | 9 | 4 | 7 | 8 | 1 | 5 |
| 4 | 7 | 8 | 5 | 2 | 1 | 9 | 3 | 6 |
| 8 | 1 | 4 | 7 | 9 | 2 | 5 | 6 | 3 |
| 7 | 6 | 9 | 8 | 5 | 3 | 1 | 2 | 4 |
| 5 | 2 | 3 | 6 | 1 | 4 | 7 | 9 | 8 |
| 2 | 4 | 7 | 1 | 8 | 6 | 3 | 5 | 9 |
| 9 | 8 | 6 | 2 | 3 | 5 | 4 | 7 | 1 |
| 3 | 5 | 1 | 4 | 7 | 9 | 6 | 8 | 2 |

சுடோக்கு எண் 33

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 6 | | | | |
| | | | | | 5 | 3 | 2 | |
| | | 2 | 8 | | 4 | | 5 | 1 |
| | 5 | 6 | | 9 | | | | |
| | 7 | | 6 | | 8 | | 4 | |
| | | | | 5 | | 2 | 8 | |
| 6 | 2 | | 7 | | 9 | 5 | | |
| | 4 | 5 | 1 | | | | | |
| | | | | 2 | | 4 | | |

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## இன்று மூன்றாவது நாள் உற்சவம்

# துர்க்காதேவியின் திருவருளைப் பெறுவோம்!

சக்தி வழிபாடானது எமது சமய வழிபாட்டிலே தொன்மையானதாக அமைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க சக்திக்குரிய தலமாக தெல்லியூர் துர்க்கா தேவி தேவஸ்தானம் விளங்கு கின்றது. துர்க்கையை மூலமூர்த்தியாகக் கொண்டமைந்து கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் விளங்கும் சிறப்பிற்குரியதாக இவ் ஆலயம் உள்ளது.

திருவருளினை அள்ளி வழங்கு கின்ற இலங்கையில் அமைந் துள்ள சக்தி ஆலயங்களில் தொன்மை வாய்ந்த தெல்லிநகர் துர்க்கா தேவியின் வருடாந்த மகோற்சவ விழாவானது கடந்த சனிக்கிழமை (18ஆம் திகதி) பூர்வ பட்ச பிரதமையும் மக நட்சத்திரமும் கூடிய நன்நாளில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

மகோற்சவப் பெரும்விழாவில் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை மாலை திருமஞ்சத் திருவிழாவும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 27ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 4.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், 29ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணிக்கு துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் துர்க்கா தேவிக்கு மிகப் பழமையான தனிப் பெருங் கோயிலாக அமைந்திருப்பது தெல்லிப் பழையிலுள்ள தேவஸ்தானமாக தல விருட்சங்களாக இலுப பையும் மாவும் மகிழும் அரசும் அமைந்து விளங்குவதும் சிறப் பிற்குரியதாகும். நின்ற திருக் கோலத்தில் எழுந்தருளி அன்னை பவனி வரும் காட்சி அடியவர்களை அத்திருவருள் ஒளிக்குள் மனம் லயிக்கச் செய்கின்றது.

**"சக்தியாய் விந்து சத்தியாய்**
**மனோன் மனிதனாகி**
**ஏத்துறு மகேசையாகி யுமை**
**திருவாணி யாகி**
**வைத்துறு சிவாதிக் கிங்ஙன்**
**விருத்தி சத்தி யொருத்தியாகும்**
**எத்திறன் நிற்றான் ஈசன்**
**அத்திறன் அவளும் நிற்பாள்"**

எனும் அருநந்தி சிவாச்சாரி யாருடைய சிவஞான சித்தியார் பாடலடி குறிப்பிடு கின்றது.

தன்னை வணங்கும் அடியவர்களுக்குத் துன்பத்தை நீக்கி அவர்களுக்கு திருவருளை வழங்கிக் காப்பதனால் துர்க்கை என்னும் நாமத்தை பெறுகின் றாள் எனக் கூறுவர். இத்தேவி பர்ாசக்தியின் படைத் தலைவ-ியாவாள். ஆபத்துக் காலத்தில் அன்பர்களுக்கு அருள்புரிந்து உதபுபவள். அக்கினிசாலை, சூரியகலை, சந்திரகலை உடையவள். இவ் அம்பிகைக்கு தேன் அபிஷேகம் செய்து புஷ்பார்ச் சனை செய்தால் உடனே ஆபத்து நீங்கி வெற்றியும் கைக்கூடும் என்பார்கள் ஆன் றோர்கள். இத்தகைய மகிமை பொருந்திய அன்னையாகிய துர்க்கை எழுந்தருளி அருள் பாலிக்கின்ற திருத்தலமே தெல்லிநகர் துர்க்காதேவி தேவஸ்தானமாகும்.

இத்தகைய சிறப்பு பொருந்திய பெருந் தெய்வமாக விளங்கு கின்ற துர்க்காதேவியை விசேடமாக வழிபாடாற்றுவதற் குரிய சிறப்பான காலப்பகுதியாக மகோற்சவ காலம் விளங்கு கின்றது. பெருந்திரளான அடியவர்கள் அன்னையினுடைய திருத்தலத்திற்கு வருகை தந்து வழிபாடாற்றி வேண்டுதல்களை நிறைவேற்றி திருவருளை பெற்று உய்கின்றனர்.

மகோற்சவப் பெருவிழாக் காலத்தில் உலக நாயகியாய் விளங்குகின்ற அன்னை துர்க்காதேவியை வழிபாடாற்று வதன் ஊடாக திருவருள் கடாட்சத்தினை பெற்று உய்ய வேண்டும்.

மூவர்க்கும் முதற் பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி

நாவிற்கும் மனத்துக்கும் நாடர-ிய பேரறி வாய்த் தேவர்க்கும் மூலவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும் யாவர்க்கும் தாயா கும் எழிற்பரையை வணங்கிடு வாய்" என்றும் பாடலுக்கு அமைய அன்னை துர்க்கா தேவியை விசேடமாக இவ் மகோற்சவ காலத்தில் வழிபா டாற்றி அன்னையின் திருவருட் பேற்றிற்கு பாத்திரமாவோமாக!

*சைவப்புலவர்*
***எஸ்.ரி.குமரன், M.A.***
*(ஆசிரியர் யாழ்ப்பாணம்*
*மத்திய கல்லூரி*

# திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண செயற்பாடுகள்

## இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்தும் என உயர்ஸ்தானிகர் நம்பிக்கை

"ஆன்மிக மற்றும் கலாசார வாழ்வில் மிகப்பெரும் முன்னு தாரணமான பங்கினை வகிக்கும் பிரபல்யமான ஆலயங்களுள் ஒன்றாக திருக்கேதீஸ்வரம் விளங்குகிறது. இதன் புனருத்தார செயற்றிட்டம் இன்று ஆரம்பமாவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்" என்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் செயற்பட விருக்கும் மன்னார் திருக்கே தீஸ்வர ஆலயத்தின் புனருத்தார ணப் பணிகள் இன்று ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி யில் இந்திய உயர் ஸ்தானிகர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"2010 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இலங்கை ஜனாதிபதி மேற்கொண்ட இந்திய விஜயத் தின்போது செய்துகொள்ளப்பட்ட கூட்டுப் பிரகடனத்தின் விளை வாகவே இந்தப் புனருத்தாரண நடவடிக்கையானது தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தக் கூட்டுப் பிரகடனத்தின்படி திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனருத்தாரண முன்மொழிவை இந்திய தொல்பொருள் அகழ்வாராய்ச்சி மதிப்பீட்டுக் குழு மற்றும் மாமல்லபுர கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் உதவியுடன் வரவேற்றது. அதன் விளைவாக இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஆலய புனருத்தாரண திட்டப் பணிகளை செயற்படுத்தும் வகையில், இந்திய உயர் ஸ்தானி-கராலயத்துக்கும் திருக்கே தீஸ்வர ஆலய திருப்பணிச் சபைக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச் சாத்திடப்பட்டது.

இத்திட்டதினை வெற்றிகர மான ஆரம்பிப்பதையிட்டு இலங்கை அரசாங்கத்துக்கு நன்றிகளையும், ஆலயத் திருப் பணிச் சபைக்கு வாழ்த்துக்க ளையும் தெரிவித்துக் கொள்கின் றேன். இத்திட்டமானது மூன்று வருட காலத்துக்குள் முடிடை கின்ற எமது இணைந்த முயற்சி யாகும்.

இந்தத் திட்டத்தின் வெற்றிகரமான பூர்த்தியானது காலவோட்டத்தில் இலங்கையின் கலாசார மற்றும் ஆன்மிக ரீதியான வாழ்வில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் மீள்கட்ட மைப்பினை ஏற்படுத்தும் என்பது டன், இந்தியாவுக்கும் இலங்கை க்கும் இடையிலான உறவினைப் பலப்படுத்தும் என்பதிலும் எது வித சந்தேகமும் இல்லை" என்று அசோக் கே காந்தா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# யுனிட்டி மிஷன் நம்பிக்கை நிதிய ஏற்பாட்டில் வவுனியாவில் ஒரே மக்கள் முகாம்

யுனிட்டி மிஷன் ட்ரஸ்ட் (UMT) மூலம் நான்காவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட "ஒரே மக்கள்" முகாம் வன்னி மாவட் டத்தின் தரணிக்குளம் பகுதியில் நடைபெற்றது. இம் முகாமில்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு, கம்பளை, களுத்துறை, பதுளை போன்ற மாவட்டங்களில் உள்ள 67 பாடசாலைகளைச் சேர்ந்த 473 மாணவர்கள் மற்றும் 60 ஆசிரியர்கள் பங்கேற்றிருந்தனர்.

நான்காவது தடவையாக ஏற் பாடு செய்யப்பட்டிருந்த இம் முகாம் ஜூன் 29 முதல் ஜூலை 02

ஆம் திகதி வரை நடை பெற்றது. "தலைமைத்துவ அபிவி ருத்தி, அறிவுத் திறன்,

ஆளுமைத் திறன் வளர்ச்சி" என்ற தலைப்பின் கீழ் நிகழ்வுகள் ஏற்பாடு

செய்யப்பட்டிருந்தன. நீண்ட காலத்தின் பின் யுனிட்டி மிஷன் ட்ரஸ்ட் மூலம் ஏற்பாடு

செய்யப்படடிருந்த ஒற்றுமை, சமரசம், சமாதானம் மற்றும் புதிய உறவுப்பாலம் குறித்த இம் முகாம் வெற்றிகரமாக நிறை வடைந்தது. 4 நாட்கள் நடைபெற்ற இம் முகாமில்

மாணவர்களுக்கு பயிற்சிபட்ட றைகள், செயற்பாடுகள் நடத்தி யதுடன் நாடகம், பாடல்போட்டி, விளையாட்டு, கலை கலாசார நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. இதன் மூலம் புதிய நட்புறவு

ஏற்படுவதுடன், தமது சுயசரி தையினூடாக புது மொழிகளை தெரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும் தன்மையும், மதிப்பும் அதிகரித்திருந்தது.

யுனிட்டி மிஷன் ட்ரஸ்ட் நம்பிக்கை நிதியத்தின் அறங் காவ லர்/ ஒருங்கிணைப்பாளர் பர்டல் பின்டோ

ஜெயவர்த்தன இம் முகாம் குறித்து கருத்து தெரிவிக்கையில நாம் நடந்து முடிந்தவற்றை சரி செய்ய முடியாது. ஆனால் இன்று ஏதாவது நல்ல விடயத்தை செய்ய முடியும். இதன் மூலம்

நாளை நம் பிள்ளைகள் ஒற்று மையாகவும், நம்பிக்கையுடனும், உறுதியாகவும் அதன் பயனை

அடைவர். எனவே தான் நாம் யுனிட்டி மிஷன் ட்ரஸ்ட் நம்பிக் கை நிதியத்தின் மூலம் இலங் கையின் பெறுமதி மிக்க வள மான சிறுவர்கள் மத்தியில் இம் முகாமை ஏற்பாடு செய்தோம்" என்றார்.

அடுத்த "ஒற்றுமை முகாம் 5" கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டு ள்ளது, முன்னைய

முகாம்களை கருத்தில் கொண்டு ஆகஸ்ட் மாதம் உயர்தர கல்வி யை முடிக்கவுள்ள மாணவர்களை இலக்கு வைத்து ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

யுனிட்டி மிஷன் ட்ரஸ்ட் நம்பிக்கை நிதியமானது இலங் கை யின் வடக்கு, தெற்கு பிரதே சங்களைச்

சேர்ந்த 16-20 வயதுக்குட்பட்ட மாணவர்களிடையே ஒற்றுமை, சமரசம், சமாதானத்தை ஏற்படுத்த

அமைக்கப்பட்டுள்ள தொண்டர் அமைப்பாகும். இக் குழுவில் 30 தொண்டர்கள் உள்ளனர். மேலும் யுனிட்டி மிஷன் ட்ரஸ்ட் இன் மருத்துவ முகாம்களில் பணிபுரிவ தற்கென சிசேஷ்ட ஆலோச கர்கள் மற்றும் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள் 35 பேர் உள்ளனர்.

## தொல்புரம் மடத்துப் பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி மகோற்சவம்

**(மருதனார்மடம்)**

தொல்புரம் மடத்துப் பிள்ளை யார் சுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை (21ஆம் திகதி) செவ்வா ய்க்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் (புதன்கிழமை) தீர்த்தத் திருவிழாவும், வியாழக் கிழமை சங்காபிஷேகமும் இடம் பெறவுள்ளது. (01)

## செல்வச்சந்நிதி மகோற்சவம் ஆரம்பம்

**(வல்வெட்டித்துறை)**

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற் சவம் கடந்த வெள்ளிக்கிழமை (17ஆம் திகதி) இரவு 10.30 மணி க்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகியது. ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை யினரால் உற்சவ காலத்தின்போது ஆன்மீக நிகழ்ச் சிகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இன்று (20ஆம் திகதி) கே. கைலைநாதன் "வேட னை விரட்டிய வேடன்" என்ற பொருளிலும், நாளை (21ஆம் திகதி) சைவப்புலவர் நித்திய தசீதரன் "இறைபணி நிற்க" என்ற பொரு ளிலும் சொற்பொழி வாற்று வார்கள்.

ஆலய உற்சவகாலத்தின்போது ஆன்மீக நிகழ்வுகளைத் தொடர் ந்து ஆச்சிரம மண்டபத்தில் மகே ஸ்வர பூசையும் இடம்பெறும் என ஆச்சிரம மடாதிபதி வை. மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

# வேல் வழிபாட்டுச் சிறப்பு

கடவுள் கொள்கையில் முதலில் தோன்றியது முருக வழிபாடு. தமிழ் நாட்டில் முருக வழிபாட்டுக்குத் தோற்றமா யிருந்தது. வேலன் வெறியாடல். இது ஓர் இனக்கரு வழிபாட்டு முறை என்பர். மரபு வழிபாடும், வேல்வழிபாடும் உருவ வழிபா ட்டுக்கு பல்லாயிரம் ஆண்டுக ளுக்கு முற்பட்டன என்பதை மானிடவியலாளர்கள் விளக்கி யுள்ளனர். மலை நிலக் கடவுளான முருகன் அல்லது வேலன் வேலை போர்க் கருவியாகவும், சேவலை கொடியாகவும் கொண்டவன். கி.மு.நாலாயிரத்துக்கு முற்பட்ட ஆதிச்ச நல்லூர் புதை பொருட் களில் இரும்பு வேல்களும் பித்தளையாற் செய்யப்பட்ட சேவல்களும் கிடைத்துள்ளன. இவை முருக வழிபாடு. பழைய காலத்திலிருந்தே தென்னாட்டவர்க்கு உரியது என்பதை மெய்ப்பிக்கின்றன. ஆதிச்ச நல்லூர் திருச்செந்தூ ருக்கு அண்மையில் உள்ளது. திருமுருகாற்றுப்படை சுட்டும் முருகன் கோயில்கள் பல பாண்டி நாட்டிலேயே அமைந்து ள்ளன. பாண்டிநாட்டின் பழைய தலைநகரான கொற்கை, இலங்கைக்கு அண்மையில் அமைந்து இருப்பதால், நமது நாட்டிலும் பண்டைக்காலத் திலிருந்தே முருக வழிபாடு சிறப்புற்றிருந்ததாக வரலாறு சொல்கிறது.

இலங்கையில் முருக வழிபாடு ஆங்காங்கே செறிந்து காணப் பட்டாலும், வட பகுதியில் வேல் வழிபாடு பல இடங்களில் காணப்படுகின்றன. ஆதியி லிருந்து நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, நயினை போன்ற இடங்களில் வேல் வழிபாடு சிறந்து நிற்கின்றது.

**"வீரவேல் காரைவேல்**
**விண்ணோர் சிறைமீட்ட**
**தீரவேல் செவ்வேல் திருக்கை**
**வேல்வாரி**
**குளித்தவேல் கொற்றவேல்**
**சூர்மார்பும் குன்றும்**
**துளைத்த வேல் உண்டே**
**துணை"**

என்று நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் வேலின் பெருமையை அழகாக எடுத்துச் சொல்கிறார்.

***-எஸ்.கனகரெத்தினம்***
***(இந்து ஒளி)***


# ஏழாலை வடக்கு ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம்

**(மருதனார்மடம்)**

கட்டுவன் தெற்கு, ஏழாலை வடக்கு எல்லையில் இருந்து அருள்புரியும் ஞானவைரவர் கோ யில் அலங்கார உற்சவம் 12ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதி செவ் வாய்க்கிழமை பகல் சங்காபிஷே கமும் அன்னதானமும், இரவு 7.00 மணிக்கு சைவப்புலவர் சைவசி த்தாந்த கலாநிதி செ. கந்த சத்தியதாசன் ஆற்றும் சிறப்புச் சொற்பொழிவும் அதனைத் தொட ர்ந்து திருவூஞ்சலும், பூந்தண் டிகையில் வைரவப் பெருமானின் வீதியுலாவும் இடம்பெறும். (01)

# அசாஞ்ச் குறித்து விவாதிக்க ஓ.ஏ.எஸ் கூட்டத்துக்கு ஏற்பாடு



விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச்(வயது 41) விவகாரம் குறித்து ஆலோசிக்க அமெரிக்க நாடுகள் கூட்டமைப்பின் (ஓஏஎஸ்) கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக கூட்டமைப்பு நாடுகளின் வெளிவிவகாரத்துறை அமைச்சர்களுக்கு ஓஏஎஸ் அழைப்பு விடுத்துள்ளது. இந்த சந்திப்பு வருகிற 24ஆம் திகதி நடக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டமைப்பில் அமெரிக்க கண்டத்தில் உள்ள 35 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இதன் தலைமையகம் வொஷிங்டனில் உள்ளது.

ஓஏஎஸ் சந்திப்பு குறித்து ஈக்வடார் கொண்டு வந்த தீர்மானத்துக்கு 23 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. அமெரிக்கா, கனடா, டிரினிடெட் மற்றும் டொபாகோ ஆகிய நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவரான அசாஞ்ச் பிரிட்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளார். இதற்கு பிரிட்டன் கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன் அவரை கைது செய்து ஸ்வீடனுக்கு நாடு கடத்த ஈக்வடாருக்கு பல்வேறு நெருக்கடிகளை அளித்து வருகிறது.

ஈக்வடார் தூதரகம் முன்பு பொலிசார் காத்திருக்கின்றனர். அசாஞ்ச் வெளியே வந்தால் அவர் கைது செய்யப்படுவார் என்றே தெரிகிறது. மேலும், ஈக்வடார் தூதரகத்துக்குள்ளும் அதிரடியாக நுழைந்து பொலிசார் அவரைக் கைது செய்வர் என்றும் கருதப்படுகிறது. பிரிட்டனின் இந்த மிரட்டலைத் தொடர்ந்தே ஓஏஎஸ் சந்திப்புக்கு ஈக்வடார் அழைப்பு விடுத்துள்ளது.

இந்நிலையில் தூதரகங்களில் அகதிகள் தஞ்சம் அடைவதை அமெரிக்க கடுமையாக எதிர்க்கிறது. இது ஈக்வடாரும் பிரிட்டனுக்குமிடையேயான பிரச்னை. அசாஞ்சே விவகாரத்தில் ஓஏஎஸ் தலையிடுவது முறையாகாது என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை அலுவலகம் தெரிவித்ததுள்ளது.

மேலும் அசாஞ்சேவை அமெரிக்காவுக்கு நாடு கடத்த அமெரிக்காவில் உள்ள அவுஸ்திரேலியத் தூதரகம் முயற்சி செய்து வருவதாக அந்நாட்டு வர்த்தக அமைச்சர் கிரேக் எமர்சன் தெரிவித்தார்.

முன்னதாக அசாஞ்சேவைக் கைது செய்ய பிரிட்டனுக்கு அமெரிக்காவே நெருக்கடி அளித்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் ஹிந்துக்கள் கட்டாய மதமாற்றம்: சட்டம் இயற்ற ஜனாதிபதி ஸர்தாரி உத்தரவு



பாகிஸ்தானில் ஹிந்துக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்படுவதைத் தடுக்க சட்டம் இயற்ற, அந்நாட்டு ஜனாதிபதி ஸர்தாரி உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் சிறுபான்மை ஹிந்து இளம் பெண்கள் கடத்தப்பட்டு கட்டாய மதமாற்றம் செய்யப்படுகின்றனர். இதனால் சிந்து மாகாணத்தில் இருந்து ஏராளமான ஹிந்துக்கள், யாத்திரை என்ற பெயரில் இந்தியாவுக்குப் புலம்பெயர்வதாகத் தகவல்கள் வெளியாயின.

இதையடுத்து சிந்து மாகாணப் பகுதிகளில் உள்ள ஹிந்துக்களின் குறைகளைக் கேட்டறிய, மத்திய அமைச்சர் மௌலா பக்ஸ் சாண்டியோ தலைமையில் மூன்று நபர் குழுவை ஜனாதிபதி ஸர்தாரி அமைத்திருந்தார்.

அடுத்த கட்ட நடவடிக்கையாக, சிந்து மாகாணத்தில் ஹிந்துக்கள் கட்டாயமாக மதமாற்றம் செய்யப்படுவதில் இருந்து தடுக்க கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்தை வடிவமைக்கும்படி ஸர்தாரி அந்த மாகாண அரசுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கராச்சியில், சிந்து மாகாண முதல்வர் காயிம் அலி ஷா, பாகிஸ்தான் மக்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஃபர்யால் தல்பூர் ஆகியோருடன் ஸர்தாரி ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையை அடுத்து, சிந்து மாகாண சட்டத்துறை அமைச்சர் ஆயாஸ் சூம்ரோ தலைமையில் ஹிந்து பஞ்சாயத்து தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்குழுவினர் கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்தை வரையறுத்து, அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் சட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கான பணிகளைத் தொடங்க ஸர்தாரி உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக, பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த சிறுபான்மையின சட்டப்பேரவை உறுப்பினர்களான சலீம் குரஷீத் கோகர், பிதன்பெர் சேவானி இருவரும் சிந்து மாகாண சட்டப்பேரவையில் கட்டாய மதமாற்றத்துக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வர வலியுறுத்தினர்.

ஆனால் ஏற்கெனவே உள்ள சட்டம் சிறுபான்மையினருக்கு போதிய பாதுகாப்பளிக்கும் நிலையில் புதிதாகத் தீர்மானமோ, சட்டமோ தேவையில்லை என்று கூறி மறுக்கப்பட்டது.

சட்டம் இருந்தும் சிறுபான்மையினர் குறிப்பாக ஹிந்து பெண்கள் கடத்தப்பட்டு மதமாற்றம் செய்யப்படுவது ஏன் என இருவரும் கேள்வி எழுப்பினர். இது தொடர்பாக ஹிந்து கவுன்சில் சார்பில் தொடரப்பட்ட வழக்கு சிந்து உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் அணு ஆயுதங்கள் பாதுகாப்புடன் உள்ளன: அமெரிக்கா



பாகிஸ்தானில் அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக உள்ளன. இவற்றை காப்பாற்றுவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள ஹமரா விமானப்படை தளத்தில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் திடீரென புகுந்து தாக்குதல் நடத்தினார்கள். இதில் ஈடுபட்ட 9 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

இந்த தளத்தில் தான் பாகிஸ்தானின் அணு குண்டுகள் பெருமளவு குவித்து வைத்து இருப்பதாகவும், அதை கைப்பற்றும் நோக்கத்துடன் தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகவும் தகவல் வெளியானது.

எனவே பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் தீவிரவாதிகள் கையில் செல்ல வாய்ப்பு இருப்பதாக விமர்சனங்கள் எழுந்தன.

இது தொடர்பாக அமெரிக்க வெளிவிவகாரத் துறை செய்தி தொடர்பாளர் விக்டோரியா நியூலேண்ட் கூறுகையில், பாகிஸ்தானில் அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக இருக்கின்றன. இது பற்றிய தகவல்கள் எங்களுக்கு பாகிஸ்தானிடம் இருந்து கிடைத்து உள்ளன.

எனவே நாங்கள் பாகிஸ்தான் அணுகுண்டுகள் தொடர்பாக கவலைப்படவில்லை. பாகிஸ்தானில் உள்ள அணு ஆயுதங்களை காப்பாற்ற எல்லா உதவிகளையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு துறை செய்தி தொடர்பாளர் பில் ஸபீக் கூறுகையில், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய ஹமரா தளத்தில் அணு குண்டு எதுவும் இல்லை என்று கூறினார்.

# உலக பார்வை

## கனடிய டொலரிலிருந்து ஆசிய பெண்ணின் உருவம் நீக்கம்







கனடாவில் 100 டொலர் நோட்டில் அச்சடிக்கப்பட்டிருந்த ஆசிய பெண்ணின் உருவம் பல்வேறு எதிர்ப்புகளால் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இந்த நோட்டை கனடா வங்கி அச்சிட்டு வெளியிட்டது. இதில் ஒரு பெண் விஞ்ஞானி நுண்ணோக்கியில் பார்த்துக் கொண்டிருப்பது போன்று இருக்கும். அந்தப் பெண்ணின் அருகே இன்சுலின் மருந்தும் காணப்படும்.

5, 10, 20, 50, 100 என்று கனடிய டொலர் நோட்டுகள் அச்சடிக்கப்பட்டன. அவற்றில் அதிக மதிப்புள்ள 100 டொலர் நோட்டில் ஆசியத் தோற்றம் கொண்ட பெண்ணுருவம் அச்சடிக்கப்பட்டது. இந்தப் பணியை எட்டுக் குழுக்கள் கலந்து ஆலோசித்து நிறைவேற்றின.

சிலர், ஆசிரியர்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னேறி வருவதை இப்படம் உணர்த்துவதாக கருதுகின்றனர். வேறு சிலர் நமது பணத்தாளில் ஆசியரை மட்டுமே படம் போட்டுக் காட்டுவதாக இருக்கக்கூடாது என்கின்றனர்.

இன்னும் சிலர் இந்தப் பணத்தாளின் மஞ்சள் கலந்த பிரௌன் நிறம் ஆசிய இனத்தவரின் மேனி வண்ணத்தை உணர்த்துவதாகக் கருதுகின்றனர்.

எனவே வங்கி உடனடியாக இந்தப் படத்தில் உள்ள பெண்ணின் ஆசியத் தோற்றத்தை நீக்கும்படி உத்தரவிட்டது.

வங்கியின் செய்தித்தொடர்பாளரான ஜெரேமி ஹேரிசன் கூறுகையில், இப்படத்தை ஓர் இனம் சார்ந்த உருவத்துடன் வடிவமைக்கவில்லை, இப்போது பலருக்கும் ஆசியத் தோற்றமாகத் தெரிந்ததால் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறினார்.

ரொரொண்டோவில் நடந்த கூட்டத்தில் மட்டும் இப்படத்துக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இப்படம் பன்னாட்டுப் பண்பாட்டை பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் அக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கியூபெக்கில் ஆசியரை மட்டும் காட்டிவிட்டு மற்ற இனத்தவரைக் காட்டாதது சரியாகத் தோன்றவில்லை என்றனர்.

பிரடரிக்டன்னில் உள்ள ஒருவர், கனடாவை பிரதிபலிக்காத ஆசிய வழிமுறையில் வந்த இந்தப் பெண்ணைப் பார்க்கவே அசிங்கமாக இருக்கிறது என்றார்.

சீனாவிலிருந்து வந்து கனடாவில் தங்கியுள்ள ஒரு பெண், இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மியுகிங் "ஹவாங் என்ற உயிரியல் மாணவி, வங்கியின் முடிவு தவறானது என்றார்.

மேலும் இந்தப் படம் கனடாவின் உண்மையான பன்னாட்டுக் கலாச்சாரப் பண்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்கும். அந்த உருவத்தை நீக்கியது, கனடா தன் சிறுபான்மையர் மீது கொண்டிருக்கும் பாகுபாட்டைக்காட்டுகிறது.



ஆப்கானிஸ்தான் நாட்டின் 93வது சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அந்நாட்டு அதிபர் ஹமீத் ஹர்சாய், ராணுவ அதிகாரிகளை பாராட்டினார்.

## ரஷ்யாவில் பெண்களுக்கு சிறைத் தண்டனை

புசி ரியோட் (Pussy Riot) என்ற இசைக்குழுவைச் சேர்ந்த பெண்களுக்கு ரஷ்யாவில் இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஜேர்மனியில் மக்கள் போராட்டம் நடத்தினர்.

மேலும் ஜேர்மனி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் இத்தண்டனைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

புசி ரியோட் இசைக் குழுவைச் சேர்ந்த பெண்கள் மாஸ்கோ தேவாலயத்தில் மாதாவே புடினிடமிருந்து ரஷ்யாவைக் காப்பாற்று என்று வேண்டி பாடலொன்றை பாடினர். இச்செயலை சமயம் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட போக்கிரித்தனம் என்று குற்றம்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

இதனையடுத்து நீதிபதி இவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜேர்மனியில் உள்ள ரஷ்ய தூதரகத்தின் முன்பு நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கூடி போராட்டம் நடத்தினர்.

# அதிக சொத்துகள் உள்ள கட்சியாக தி.மு.க: இரண்டாமிடத்தை தட்டிக்கொண்டது அ.தி.மு.க



தமிழகத்தில், தி.மு.க.விற்கே அதிகப்படியான சொத்துகள் உள்ளன. அதிகப்படியான வருவாய் உடைய கட்சியாகவும், அக்கட்சியே திகழ்கிறது. இதற்கு அடுத்தபடியாக, அ.தி.மு.க. உள்ளது.

தமிழகத்தில், 1967ம் ஆண்டு முதல், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க., என, இரண்டு திராவிடக் கட்சிகளே மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றன. அதேநேரத்தில், இக்கட்சிகளின் வருவாயும், மற்ற கட்சிகளுடன் ஒப்பிடுகையில், ஆண்டுக்கு ஆண்டு கணிசமாக அதிகரித்து வருகிறது. அதிலும், அ.தி.மு.க.,வுடன் ஒப்பிடுகையில், தி.மு.க.,விற்கே, அதிகப்படியான வருவாய் கிடைத்துள்ளது. அதிகப்படியான சொத்துகளைக் கொண்ட கட்சியாகவும், தி.மு.க. திகழ்கிறது. இருந்தாலும், அ.தி.மு.க.,வும், தன் வருவாய் மற்றும் சொத்துகளை பெருக்கிக் கொண்டே செல்கிறது. இந்த இரு கட்சிகளின், வருமான வரி கணக்கு மற்றும் இருப்பு நிலை அறிக்கையின் அடிப்படையில், இத்தகவல்கள் தெரிய வந்துள்ளன.

2008-09ஆம் ஆண்டில், தி.மு.க.வின் மொத்த ஆண்டு வருமானம், 16.81 கோடி ரூபாய். அதுவே, 2007-08இல், 2.66 கோடி ரூபாயாக இருந்தது. அதாவது ஒரு ஆண்டில், இந்தக்கட்சியின் வருவாய் 531 சதவீதம் அதிகரித்து உள்ளது. இதுகுறித்து, தி.மு.க., - எம்.பி., இளங்கோவன் கூறுகையில், 2007-08 ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2008-09ஆம் ஆண்டில் வருவாய் அதிகரித்ததற்கு, லோக்சபா தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களிடமிருந்து தேர்தல் நிதி வசூலித்ததே காரணம், என்றார்.

தமிழகத்தில், 2011ம் ஆண்டில் நடந்த சட்டசபை தேர்தலில், அமோக வெற்றி பெற்றதன் மூலம், அ.தி.மு.க. ஆட்சி ஏற்பட்டது. இதனால், 2011-12ம் நிதியாண்டில், அக்கட்சியின் வருவாய், 12.14 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களிடமிருந்து, வேட்பு மனு கட்டணமாக வசூலித்த தொகையால், வருமானம் இந்த அளவுக்கு உயர்ந்துள்ளது. கடந்த, 2010 -11ஆம் ஆண்டில், அ.தி.மு.க.வின் வருவாய், 9.74 கோடி ரூபாய். வருவாய் கணக்கு சமர்ப்பித்துள்ள, இந்தக் கட்சிகள், கட்சிகளுக்கு நிதி வழங்கிய நபர்கள், அவர்கள் வழங்கிய தொகை போன்ற விவரங்களையும் சமர்ப்பித்துள்ளன. மேலும், சொத்துகளைப் பொறுத்தமட்டில், அ.தி.மு.க.வை விட, அதிக சொத்துகளை கொண்ட கட்சியாக, தி.மு.க., உள்ளது. 2006-07ஆம் ஆண்டு முதல், 2011-12ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில், தி.மு.க.வின் மொத்த சொத்து மதிப்பு, 289.85 கோடி ரூபாய். இதே காலகட்டத்தில், அ.தி.மு.க.வின் மொத்த சொத்து மதிப்பு 258.45 கோடி ரூபாய். அதே நேரத்தில், 2007-08 ஆம் ஆண்டில், 40.26 கோடி ரூபாயாக இருந்த அ.தி.மு.க.வின் சொத்து மதிப்பு, 2009-10ஆம் ஆண்டில், 35.97 கோடி ரூபாயாக குறைந்தது. தற்போது அ.தி.மு.க., 55.83 கோடி ரூபாய் சொத்துகளைக் கொணடுள்ளது.

# வசதிக்கு ஏற்ப வழக்கை இழுத்தடிக்கின்றனர்

## கருணாநிதி குற்றச்சாட்டு



அனைத்து சட்டங்களையும், தங்கள் விருப்பத்திற்கும், வசதிக்கும் ஏற்ப, துஂபிரயோகம் செய்தவர்கள் தான், சொத்துக்குவிப்பு வழக்கினையும், இழுத்தடிக்கின்றனர் என, தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெயலலிதா மீது, கடந்த 1996ஆம் ஆண்டு தொடரப்பட்ட சொத்துக்குவிப்பு வழக்கு, பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு, எட்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஏற்கனவே, இந்த நீதிமன்றில் இரண்டு நீதிபதிகள் விசாரித்த பின், தற்போது விசாரிக்கும் மூன்றாவது நீதிபதி மல்லிகார்ஜுனையாவும், இம்மாதம் ஓய்வு பெறுகிறார். இந்த வழக்கில், விளக்கத்திற்கு மேல் விளக்கம் கேள்விக்கு மேல் கேள்வி வாய்தாவிற்கு மேல் வாய்தா கேட்டே, நாட்களை கடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களது கோரிக்கைக்கு எதிராக தீர்ப்பு வரும்போது, மேல் முறையீடு செய்து நாட்களை கடத்தி வருகின்றனர். இறுதியாக, இந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கே, தகுதியில்லை என்று ஜெயலலிதா தரப்பினர் முறையிட, அந்த நீதிபதிக்கு தகுதி இருக்கிறதா, இல்லையா என்ற விசாரணை தான், தற்போது கர்நாடகா உயர்நீதிமன்றில், நடந்து கொண்டிருக்கிறது. இதன் விளைவாக, அந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக, ஆரம்பம் முதல் தொடர்ந்து வாதிட்டு வரும், மூத்த வழக்கறிஞர் ஆச்சார்யா, தன் பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.


அவர் அளித்துள்ள இராஜினாமா கடிதத்தில், அவர் சந்தித்த நெருக்கடிகள், மிரட்டல்களை வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றில் மாரியப்பன் என்பவரின் மேல் முறையீட்டு மனு, 14 ஆண்டுகள் நிலுவையில் இருப்பதற்கு கண்டனம் தெரிவித்த உயர்நீதிமன்றம் மூன்று மாதங்களுக்குள், விசாரித்து தீர்ப்பு வழங்க உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு, 14 ஆண்டு கள் நடந்த வழக்குக்கு என்றால், 16 ஆண்டுகளாக நடக்கும் ஜெயலலிதா தரப்பினரின், சொத்துக்குவிப்பு வழக்குக்கும் இந்த தீர்ப்பு பொருந்துமா.

இவ்வாறு கருணாநிதி தெரிவித்துள்ளார்.

# பிரதமர் பதவிக்கு போட்டி: நரேந்திர மோடி பேட்டி



பிரதமர் பதவிக்கு போட்டியிடுவது குறித்து குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடி பேட்டியளித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் பிரதமர் பதவிக்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் எல்.கே.அத்வானி, சுஷ்மா சுவராஜ், நரேந்திர மோடி, ராஜ்நாத் சிங், அருண்ஜெட்லி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் பிரதமர் வேட்பாளர்களாக உள்ளனர் என்று அக்கட்சியின் தலைவர் நிதின் கட்காரி தெரிவித்தார்.

இந்நிலையில் அகமதாபாத்தில் அகில இந்திய மேலாண்மை கல்வி அமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி ஒன்றில் மோடி கலந்து கொண்டார்.

அப்போது இது குறித்து நரேந்திர மோடி, தேசிய அரசியலை நாடி செல்லவில்லை என்றும் அதேநேரத்தில் அதை தட்டிக்கழிக்க விரும்பவில்லை எனவும் கூறியிருக்கிறார்.

மேலும் தற்போது குஜராத் மக்களின் நலன் மற்றும் உயர்வையே தாம் எண்ணி செயற்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

# இந்திய செய்திகள்

## மீண்டும் பிரணாப்புடன் மோதும் சங்மா



ஜனாதிபதி தேர்தலில் பிரணாப் முகர்ஜி வெற்றி பெற்றதை எதிர்த்து, பி.ஏ.சங்மா உச்ச நீதிமன்றத்தில் நாளை மனுத் தாக்கல் செய்ய உள்ளார்.

இந்தியாவின் ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் சார்பில் பிரணாப் முகர்ஜியும் பாஜக சார்பில் பி.ஏ.சங்கமாவும் மோதினர்.

அப்போது ஆதாயம் தரும் பதவியில் இருந்துகொண்டே பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதி தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ததாக தேர்தல் ஆணையத்திடம் சங்மா மனு அளித்திருந்தார். ஆனால் அவரது மனுவை தேர்தல் ஆணையம் நிராகரித்து விட்டது.

பின்னர் நடந்த தேர்தலில் பிரணாப் முகர்ஜி அதிகமான வாக்குகள் எண்ணிக்கையில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக உள்ளார்.

ஆனால் பிரணாப் முகர்ஜியின் வெற்றியை எதிர்த்து வழக்கு தொடர்வேன் என சங்மா ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

வழக்கு தொடர்வது அவரது தனிப்பட்ட விருப்பம் என அவரை தேர்தலில் முன்னிறுத்திய பாரதிய ஜனதா கட்சி அப்போதே கருத்து தெரிவித்திருந்தது. இந்நிலையில் பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை எதிர்த்து சங்மா நீதிமன்றத்தில் வழக்குத் தொடர உள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை அவரது சட்டத்தரனியும், முன்னாள் பாரதிய ஜனதா எம்.பி.யுமான சத்ய பால் செய்து வருகிறார். சங்மாவுக்கு ஆதரவாக மூத்த சட்டத்தரனி ராம்ஜெத்மலானியும் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர உள்ளார்.



விருதுநகர் மாவட்டம் சிவகாசி சிறுகுளம் கண்மாய் ஆக்கிரமிப்பு அகற்றம் போது, கற்களை வீசியதால், கூட்டத்தை கலைக்க, தடியடி நடத்திய பொலிசார்.

## மீண்டும் சீனப் படைகள் ஊடுருவல்:

# இராணுவத் தளபதி எல்லையில் சுற்றுப் பயணம்



சீனப் படைகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவியதாக வெளியாகியுள்ள தகவல் மத்திய அரசில் பதற்றத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

காஷ்மீர் மாநிலத்தின் கிழக்கு லடாக் பகுதியை சேர்ந்த சசூல் மற்றும் டாங்ஸ்டே பகுதியில் சுமார் 800 மீற்றர் தொலைவிற்கு சீன படைகள் சென்றுள்ளது.

இந்தாண்டில் மட்டும் இரண்டு முறை சீன படைகள் இப்பகுதிகளுக்கு சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜம்மு காஷ்மீர், இமாச்சல் பிரதேசம் மற்றும் அருணாசல பிரதேசம் வரையிலான 5 ஆயிரம் கி.மீற்றர் தொலைவு கொண்ட எல்லைப் பகுதியில் சீனா பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக அருணாசல பிரதேசத்திற்கு உரிமை கொண்டாடி வரும் சீனா, அம்மாநில எல்லைப் பகுதியில் சுமார் 10 ஆயிரம் கி.மீற்றர் தொலைவிற்கு இரயில் பாதையை அமைத்துள்ளது. இந்நிலையில் சீனாவின் ஊடுருவல் குறித்த தகவல் கிடைக்கப்பெற்றதையடுத்து இராணுவ தளபதி பிக்ராம் சிங் மூன்று நாள் பயணமாக லடாக் சென்று நேரில் பார்வையிட்டார்.

தொடர்ந்து இராணுவத் தளபதி பிக்ராம் சிங் அருணாசல பிரதேச மாநிலத்திலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு எல்லைப் பகுதியை பார்வையிட உள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

# லக்ஷ்மன் ஓய்வு!



இந்திய கிரிக்கெட் அணியின் மகத்தான துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான வி.வி.எஸ்.லக்ஷ்மன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து உடனடியாக ஓய்வுபெறுவதாக சனிக்கிழமை அறிவித்தார்.

சக வீரர்களால் "வெறி வெறி ஸ்பெஷல்" லக்ஷ்மன் என்றழைக்கப்பட்டாலும், வங்கிபுறப்பு வெங்கட சாய் லக்ஷ்மன் என்பதே அவருடைய முழுப்பெயர். அதையே சுருக்கி வி.வி.எஸ். லக்ஷ்மன் என்றழைக்கப்பட்டார்.

நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அனைவருக்கும் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் அளிக்கும் வகையில் முன்னதாகவே ஓய்வுபெற்றுவிட்டார் லக்ஷ்மன்.

37 வயதாகும் லட்சுமணின் 16 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்தது. இருப்பினும் உள்ளூர் போட்டிகளில் அவர் தொடர்ந்து விளையாடுவார். தனது உள் மனதைக் கேட்டே ஓய்வு முடிவை எடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வு குறித்து அவர் மேலும் கூறியதாவது சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுகிறேன். அதற்கு இதுதான் சரியான தருணம் என நினைக்கிறேன். ஓய்வு முடிவு கடினமானதுதான். எப்போதுமே நான் எனது மனசாட்சியை கேட்பவன். மனசாட்சி என்பது முன்னறிந்து சொல்லக்கூடியது.

எனது கிரிக்கெட் வாழ்க்கை முழுவதும் அதைக் கேட்டே செயல்பட்டிருக்கிறேன். கடந்த 4 நாள்களாக எனக்குள் நிறைய சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது. இருப்பினும் ஓய்வுபெற இதுதான் சரியான தருணம் என்பதை உணர்ந்துவிட்டேன். இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்க இதுதான் சரியான தருணம் என்று கருதுகிறேன்.

வெள்ளிக்கிழமை இரவு என் மனதை கட்டுக்குள் வைக்க முடியவில்லை. இறுதியில் எனது உள் மனதை கேட்டு ஓய்வுபெறும் முடிவுக்கு வந்தேன். இதையடுத்து சனிக்கிழமை காலையில் இந்தத் தகவலை அணியின் தேர்வுக்குழு தலைவர் ஸ்ரீகாந்திடம் தெரிவித்தேன். இதேபோல் சகவீரர்களிடமும் இந்த விஷயத்தை தெரிவித்தேன். நியூஸிலாந்து தொடருக்கு முன்னதாகவே ஓய்வு பெறுவது குறித்து அவர்கள் அனைவருமே ஆச்சர்யம் தெரிவித்தனர்.

பி.சி.சி.ஐ தலைவர் சீனிவாசனிடம் தெரிவித்தபோது, அவர் தயக்கத்தோடே எனது முடிவை ஏற்றுக் கொண்டார்.

இந்தியாவுக்காக கிரிக்கெட் விளையாட வேண்டும் என்பது எனது சிறு வயது கனவு. அந்த வாய்ப்பை எனக்கு கொடுத்ததற்காக கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொள்கி றேன்.

இந்திய அணி, சொந்த மண்ணிலும், அன்னிய மண்ணிலும் வெற்றிகளைக் குவித்த காலத்தில் விளையாடியது என்னுடைய அதிர்ஷ்டம். என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கை முழுவதும் என்னை வழிநடத்திய மற்றும் ஊக்கப்படுத்தியவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

2001-ல் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி "பலோ ஒன்" ஆனது. அப்போது 281 ஓட்டங்களைக் குவித்து அணியை சரிவிலிருந்து வரலாற்று சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுத் தந்ததை நினைவு கூர்ந்த அவர், வரலாற்றுச் சாதனை மிக்க வெற்றியைப் பெற்ற அணியில் நாமும் இடம்பெற்றிருந்தது எவ்வளவு அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொள்வேன். அந்தப் போட்டியின் முடிவை எப்படி மாற்றினோம் என்று நினைத்துப் பார்ப்பது உணர்ச்சிமயமானது.

முன்னணி வீரர்களின் மனதில் ஓய்வு எண்ணம் தோன்றும்போது, ஓய்வு பெறும் தருணம் வந்துவிட்டது என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன். கடந்த 4 அல்லது 5 ஆண்டுகளாகவே நானும் அதை உணர ஆரம்பித்துவிட்டேன். எப்போதுமே உள் மனசாட்சியைக் கேட்டே முடிவெடுப்பேன். அதனாலேயே என்னுடைய 17-வது வயதில் மருத்துவப் படிப்புக்கு போகாமல் கிரிக்கெட்டை தேர்வு செய்தேன்.

எப்போதுமே என்னுடைய கண்ணியத்தை காப்பாற்றுவதோடு, அணிக்கும் சிறந்த பங்களிப்பை கொடுக்கவே முயற்சித்தேன். சில நேரங்களில் நான் சரியாக விளையாடவில்லை என்றால், பெரும் ஏமாற்றமடைவேன். இந்த கிரிக்கெட் வாழ்க்கை உணர்ச்சிபூர்வமான, மறக்க முடியாத பயணம்: என் வாழ்நாள் முழுவதும் இந்த நினைவுகளில் திளைத்திருப்பேன் என்றார்.

இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியத் தொடர்களில் ரன் குவிக்கத் தவறியது குறித்துப் பேசிய லக்ஷ்மன் அப்போது சிலர் என்னை விமர்சித்தார்கள். ஆனால் அதைவிட அதிக அளவில் நலம் விரும்பிகள் இருந்தார்கள். ஆனால் எல்லா மனிதர்களையும் திருப்திப்படுத்த முடியாது. வெற்றியும், தோல்வியும் கிரிக்கெட் வீரர்களின் வாழ்க்கையில் ஒரு பகுதி.

என்னுடைய காலத்தில் விளையாடிய வீரர்களில் பெரும்பாலானோர் ஜாம்பவான்கள். அவர்களுடன் நட்போடு இருந்த நினைவுகள் வாழ்க்கை முழுவதும் என்னோடு இருக்கும். ஓய்வுக்குப் பிறகு என்ன செய்வதென்று இன்னும் முடிவெடுக்கவில்லை. இருப்பினும் ஹைதராபாத் அணி வீரர்களுடன் என்னுடைய அனுபவத்தை பகிர்ந்து கொள்வதே இப்போதைய இலக்கு. நான் ஹைதராபாத் அணிக்காக விளையாடியபோது மூத்த வீரர்கள் என்னுடன் அவர்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்கள். அதே போல் நானும் செயல்படுவேன்" என்றார்.

8,781 ஓட்டங்கள்

இதுவரை 134 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். 17 சதம் உள்பட 8,781 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

ஒருநாள் போட்டியில் தொடர்ந்து விளையாடாதபோதிலும், இதுவரை 83 போட்டிகளில் விளையாடி 2,338 ஓட்டங்களை குவித்துள்ளார். இதில் 6 சதங்களும் அடங்கும்.

16 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடினாலும், இந்தக் காலக்கட்டங்களில் நடைபெற்ற 4 உலகக் கிண்ண போட்டிகளில் ஒன்றில் கூட அவர் விளையாடியதில்லை என்பது துர்திஷ்டவசமானது.

# ருவென்ரி-20 உலகக்கிண்ணம்: இந்திய அணிக்கு புதிய சீருடை



இந்திய கிரிக்கெட் அணியின் ருவென்ரி-20 சர்வதேசப் போட்டிகளுக்கான புதிய சீருடையொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்திய அணி டெஸ்ற் போட்டிகள், ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ருவென்ரி-20 சர்வதேசப் போட்டிகள் மூன்றிற்கும் வெவ்வேறு விதமான சீருடைகளை அணியவுள்ளது.

இதுதொடர்பான அறிமுக விழாவில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோணி, மூன்று வகையான போட்டிகளுக்கும் மூன்று வகையான சீருடைகளை அணிவது பார்வையாளர்களுக்கு இலகுவானது என தெரிவித்தார்.

தொலைக்காட்சிகளில் போட்டிகளைப் பார்வையிடுவோர் வெண்ணிறச் சீருடையைக் கண்டால் அது டெஸ்ற் போட்டி எனவும், நீல நிறச் சீருடையைக் கண்டால் அது ஒரு நாள் சர்வதேசப் போட்டி எனவும், தற்போதைய புதிய சீருடையைக் கண்டால் அது டுவெண்டி டுவெண்டி சர்வதேசப் போட்டி எனவும் அடையாளம் கண்டுகொள்வர் என தெரிவித்தார்.

இது மிகச்சிறப்பான ஆரம்பம் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய சீருடை முன்பை விட 43 சதவீதம் பாரம் குறைந்தது என்பது மிகச்சிறப்பானது என தெரிவித்த டோனி, சீருடை பாரம் குறைவாக இருப்பது அதிக ஓட்டங்களைத் தராவிட்டாலும், வீரர்களுக்கு சிறப்பான உணர்வைத் தரும் எனத் தெரிவித்தார்.

புதிய சீருடையில் இந்தியாவின் தேசியக்கொடி தோள்பட்டைக்கு அருகாகப் பதிக்கப்பட்டுள்ளது.

தேசியக் கொடியை அணிந்திருப்பது பெருமையானது என தெரிவித்த விரேந்தர் சேவாக், அதை அணிந்து விளையாடுவதன் மூலம் புதிய பலம் கிடைக்கப் பெறும் எனவும் தெரிவித்தார்.

# குத்துச் சண்டையில் வெண்கலம்

தெல்லிப்பழை

கொழும்பில் இடம்பெற்றுவரும் 38 ஆவது தேசிய விளையாட்ட விழாவில் நடைபெற்ற குத்துச் சண்டை போட்டியில், 75 கிலோப் பிரிவில் வடமாகாணத்திலிருந்து யாழ். பருத்தித்துறை அல்வாயைச் சேர்ந்த இரஞ்சிநாதன் ரமேஸ் பங்குபற்றி தென்னிலங்கை வீரர்களோடு அபாரமாக ஆடி வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

வெண்கலப் பதக்கத்தைப் பெற்று வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்த இவரை வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தமது அலுவலகத்தில் சந்தித்து பாராட்டைத் தெரிவித்ததோடு ஊக்கத்தையும் அளித்திருந்தாதர்.

# லக்ஷ்மனின் இடத்தை எவராலும் நிரப்பமுடியாது - சச்சின்



வி.வி.எஸ்.லக்ஷ்மனின் இழப்பு நிரப்பப்பட முடியாத ஓர் இழப்பு என இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார். வி.வி.எஸ்.லக்ஷ்மன் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளமை தொடர்பாகவே சச்சின் டெண்டுல்கர் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தன்னுடைய மிகச்சிறந்த நண்பனும், இந்தியக் கிரிக்கெட்டின் மிகச்சிறந்த வீரர்களில் ஒருவருமான வி.வி.எஸ். லக்ஷ்மன் இனிமேல் தன்னுடன் சேர்ந்து விளையாட மாட்டார் என்பதை அறியக் கவலையடைவதாக சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

வி.வி.எஸ். லக்ஷ்மனுடன் மிகச்சிறந்த கிரிகெட் ஞாபகங்களைப் பகிர்ந்து கொண்டமை தொடர்பாக மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர்கள், வி.வி.எஸ். லக்ஷ்மன் ஓர் உண்மையான கிரிக்கெட் ஜாம்பவான் எனவும், மிகச்சிறந்த மனிதர் எனவும் தெரிவித்துள்ளார்.

வி.வி.எஸ்.லக்ஷ்மனின் இன்மையை அணியும், தானும் உணர்வதாகத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், இருவரும் இணைந்து விளையாடிய 16 வருடங்களை எப்போதும் மகிழ்ச்சியுடன் நினைவு கூருவார் எனவும் தெரிவித்தார்.

சச்சின் டெண்டுல்கரும், வி.வி.எஸ். லக்ஷ்மனும் இணைந்து 2004ஆம் ஆண்டு சிட்னியில் வைத்து 353 ஓட்ட இணைப்பாட்டத்தைப் பகிர்ந்து இந்திய அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்ததோடு, பல தடவைகளில் சிறப்பான இணைப்பாட்டங்கள் மூலம் அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# ராசபூபதி வெற்றிக்கிண்ணம்: அளவெட்டி மத்தி சம்பியன்

## ராசபூபதி வெற்றிக்கிண்ணத்தை அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் கைப்பற்றியது

தெல்லிப்பழை

வட்டுக்கோட்டை இளைஞர் கழகத்தினால் 11 பேர் 20 ஓவர்களைக் கொண்ட யாழ். மாவட்டத்திற்கு உட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான நடாத்தப்பட்ட மென்பந்தாட்டத் தொடரில் 30 க்கும் மேற்பட்ட கழகங்கள் பற்குபற்றின. இத் தொடரில் சுற்றுப் பேரட்டிகளில் முதல் 3 அணிகள் தெரிவுசெய்யப்பட்டன. அம் மூன்று அணிகளில் இருந்து இறுதிப்போட்டிக்கு அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் ஒக்ஸ்பேட் விளையாட்டுக்கழகமும் தகுதிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் முதலில் களத் தடுப்பை தெரிவுசெய்யப்பட்டது. இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் ஒக்ஸ்பேட் ஆரம்ப வீரர்கள் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆடியபோதும் ஒக்ஸ்பேட் விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக வீழ்ந்த வண்ணம் இருந்தன. இறுதியில் 18.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் 137 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் நிதர்சன் 37, ரவி - 24, ஜஸ்ரின் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பார்த்தீபன் - 3, கபிலன், சுதன், வைகுந்தன் தலா விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 138 என்ற இலக்கைநோக்கி துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி ஆரம்ப துடுப்பாட்ட வீரரான அன்ரனி நிக்சனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழக அணி 19.4 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று இராசபூபதி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. துடுப்பாட்டத்தில் அன்ரனி நிக்ஷன் 51, பார்த்தீபன் - 30, கபிலன் ஆட்டமிளக்கமால் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சியில் அஜன் - 3, அனுசன் -2 விக்கெட்டுக்களைக் கைப்பறினர். இப் போட்டியின் ஆட்டநாயகனாக அளவெட்டி மத்தியின் பார்த்தீபனும், அதிக ஆறு ஓட்டத்தை பெற்றமைக்காக அளவெட்டி மத்தி அன்ரனி நிக்சனும், சிறந்த பந்துவீச்சளரகாக மானிப்பாய் ஒக்ஸ்போ்ட் அயனும் இத் தொடரின் ஆட்டநாயனாக அளவெட்டி மத்தியின் தயாளனும் தெரிவுசெய்யப்பட்டார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 20.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது